பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 9 திங்கட்கிழமை (24-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:171

# செஞ். குழு கைதடி சென்று திரும்பியது!

## வயோதிபர்கள் 126 பேரை நேற்று அழைத்து வந்தது

யாழ்ப்பாணம்,ஜூலை24

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமான கைதடிப் பகுதியில் சிக்குண்டிருந்த வயோதிபர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் நேற்று அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.**

**படையினர் மற்றும் புலிகளின் அனுமதி பெற்று நேற்று அப்பகுதிக்குச் சென்ற செஞ்சிலுவைக் குழுவினர் வயோதிபர்களைப் பாதுகாப்பாகக் கூட்டி வந்தனர்.**

கைதடி வயோதிபர் இல்லத்தில் தங்கியிருந்த 80 வயோதிபர்களையும் தென்மராட்சியின் ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருந்த 46பேரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவருவது தொடர்பாக செஞ்சிலுவைச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் புறப்படும்

யாழ்ப்பாணம்,ஜூலை24

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் இன்று திருமலை நோக்கிப் புறப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக்கப்பலில் பயணம் செய்ய பயணச்சீட்டுப் பெற்றவர்களைபயண ஏற்பாட்டுடன் இன்று காலை 7 மணிக்கு யாழ் சிங்கள மகாவித்தியாலயத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## 16 படையினர் காயம்

கொழும்பு,ஜூலை24

நாகர்கோயில், சரசாலை மற்றும் கொழும்புத்துறை பகுதிகளில் கடந்த ஒருவார காலத்தில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படையினர் தரப்பில் 16பேர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் படையினர் மேற்கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் எனவும் -

பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தனர் எனவும் -

ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

தரம் 5
புலமைப்பரிசில்
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
அங்கம் - 5
உள்ளே!

# அரசமைப்பு நகல் அடுத்த 10 நாள்களில் நாடாளுமன்றத்தில்!

கொழும்பு,ஜூலை24

**அரசு தயாரித்துள்ள புதிய அரசமைப்பு நகல் அடுத்த மாதம் முதல் வாரத்தில் - பெரும்பாலும் அடுத்த 3ஆம் திகதியன்று - நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக அரசாங்கத் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

கடந்த சில மாதங்களாக விவாதிக்கப்பட்ட அரசமைப்பு நகல் இவ்வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்படவிருக்கின்றது என்றும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்துக்கு புதிய படைத் தளபதி!

கொழும்பு,ஜூலை24

வன்னி மாவட்ட இராணுவத் தளபதியாகப் பதவி வகித்து வந்த மேஜர் ஜெனரல் அன்ரன் விஜஜேந்திரா யாழ். மாவட்டத் தளபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத் தளபதியாகப் பணியாற்றிவரும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வன்னி மாவட்டத் தளபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

வடக்கின் கூட்டுப்படைத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இராணுவத்தின் பிரதம அதிகாரிப் பதவியோடு இந்தப் பதவியையும் தொடர்ந்து வகிப்பார்.

இராணுவத் தலைமையகத்தில் படையினருக்கான பயிற்சிக்குப் பொறுப்பாகப் பணிபுரிந்த பிரிகேடியர் சனத் கருணாரட்ண இராணுவப் பேச்சாளராகப் பதவியேற்கவிருக்கின்றார்.

இவர் முன்னர் பருத்தித்துறையில் பிரிகேட் தளபதியாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை இராணுவப் பேச்சாளராகப் பணிபுரிந்த பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ படைத் தலைமையகத்தில் விளையாட்டு அதிகாரியாக பொறுப்பேற்கின்றார். (உ-3)

# யாழ். மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை 9ஆகக் குறைப்பு

அடுத்த பொதுத் தேர்தலின் போது யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம். பிக்களின் எண்ணிக்கை பத்தில் இருந்து ஒன்பதாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் தெரிவு செய்யப்படும் எம்.பிக்களின் எண்ணிக்கை மறு ஒழுங்கு படுத்தப்பட்ட போது இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் 8 இல் இருந்து 7ஆகக் குறைக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்டத்தின் பிரதிநிதித்துவம் 7 இல் இருந்து 8ஆக உயர்த்தப்படுகின்றது.

அனைத்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்படும் 196 எம்.பிக்களின் எண்ணிக்கை மாவட்டம் தோறும் பதிவு செய் யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டங்களுக்கிடையில் பகிரப்படுவது தெரிந்ததே. (உ-3)

# தேர்தலைக் கண்காணிக்க 8 ஆயிரம் வெளிநாட்டினர்!

## ஐ.தே.கட்சி அழைக்கும்

கொழும்பு,ஜூலை24

விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சுமார் 8 ஆயிரம் வெளிநாட்டுப் பார்வையாளர்களை இங்கு அழைக்க ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு செய்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம்,அமெரிக்க ஜிம்மிக்காட்டர் நிலையம் ஆகியவற்றில் இருந்தே இவர்கள் அழைக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பாக ஐ.தே.க. அனுப்பிய அழைப்பை அவர்கள் ஏற்றுள்ளனர் என்றும் -

இந்தக் கண்காணிப்பாளர்களைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் சம்பள நிலுவை இவ்வாரம் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு 95 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு மே மாதம் வரையான காலப் பகுதிக்குரிய சம்பள நிலுவைக் கொடுப்பனவு இவ்வாரம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண அதிபர்,ஆசிரியர்களின் சம்பள நிலுவைக்காக ஒதுக்கப்பட்ட 18 கோடி ரூபா நிதியில் யாழ்.மாவட்டத்துக்கான நிதி கடந்த வெள்ளிக்கிழமை மாகாணசபையால் அனுப்பப்பட்டுள்ளது என்றும்-

இந்தச்சம்பள நிலுவையை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் -

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## தமிழரின் அபிலாசைகளான
# மூன்று முக்கிய அம்சங்களை கூட்டணி விட்டுக்கொடுக்காது!

கொழும்பு,ஜூலை24

அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு நகலில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் மூன்று முக்கிய அம்சங்களில் விட்டுக்கொடுப்பதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

★ ஒற்றையாட்சி முறையை ஒழித்தல் -

★ வடக்கு - கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாதிருத்தல் -

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனித்துப் போட்டியிட முடிவு

கொழும்பு,ஜூலை24

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதென எடுத்த தீர்மானத்தை ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் உறுதி செய்துள்ளது. நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கட்சியின் தலைவர் அமைச்சர் எம். எச்.எம்.அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

# இரு சிரேஷ்ட அமைச்சர்கள் ஐ.தே.கவில் சேர விருப்பம்?

கொழும்பு,ஜூலை24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்கள் இருவர் உட்பட அக்கட்சி உறுப்பினர்கள் பலர் ஐ.தே.கவில் இணைய விருப்பம் தெரிவித் துள்ளதாக ஐ.தே.க வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'லக்பிம' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் மீது கொண்ட அதிருப்தி, சிரேஷ்ட தன்மைக்கு மதிப்பளிக்காமை போன்ற காரணங்களால் இவர்கள் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாகவும் -

அடுத்த தேர்தலில் ஐ.தே.க. சார்பில் வேட்பாளராகப் போட்டியிட அவர்கள் ஐ.தே.க.வின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் -

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# கட்டுநாயக்காவில் பயிற்சியின்போது ஜெட் விமானம் மோதி நொறுங்கியது!

## விமானி தப்பினார்

கொழும்பு,ஜூலை24

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள விமானப்படையினரின் தளத்தில் தரையிறங்கிய சமயம் விமானப்படையின் 'எவ்-7' ரக யுத்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகிப் பலத்த சேதமடைந்தது.

நேற்றுப்பிற்பகல் 1.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த விமானத்தில் விமானி ஒருவர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். பயிற்சியின் போது விமானத்தை தரையிறக்க முயன்றபோது அதன் சக்கரங்களில் ஒன்று செயலிழந்ததால் அது தரையில் மோதி நொறுங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரையில் விமானம் மோத முன்னர் 'பரசூட்' மூலம் குதித்த விமானி சிறு காயங்களுடன் தப்பிவிட்டார்.

இந்த விபத்தினால் ஓடு தளம் சிறு சேதத்துக்குள்ளானது.

தீயணைப்புப் படையினர் அங்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் தீயை அணைத்து நிலமையைச் சீராக்கினர்.

இந்த விபத்துக்காரணமாக கட்டுநாயக்காவில் தரையிறங்க வேண்டிய பல சர்வதேச விமானங்கள் சென்னைக்குத் திருப்பி விடப்பட்டன. (ஐ-3-4-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு முற்றாகப் பயனற்றது எனத் தெரிவிப்பு

## சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம் அறிக்கை

இலங்கையின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு முற்றாகப் பயனற்றதொன்று என நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டனின் அரசாங்கத் திணைக்களமான சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (The Department For International Devolopment) கடுமையாக விமர்சித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் வறுமை ஒழிப்பையும் அபிவிருத்தி முன்னேற்றத்தையும் அடிப்படையான இலக்காகக் கொண்டு செயற்படும் இந்தத் திணைக்களம் கடந்த வருடத்துக்கான ஆய்வறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களைச் சேர்ந்த வறிய நாடுகளுக்கு கணிசமான உதவிகளை வழங்கி வரும் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் இலங்கை தொடர்பான தனது ஆய்வறிக்கையில் கடுமையாக விமர்சித்துள்ளது.

இலங்கையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மோதல் நடைபெறும் பிரதேசங்களில் இடம்பெயர்ந்திருக்கும் பெருந்தொகையான மக்கள் மோசமான வறுமையில் சிக்கித் தவிப்பதாகவும் இந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பாகக் குறிப்பிடுகையில், உள்நாட்டு யுத்தத்தாலும் உயிரிழப்புக்களாலும் துன்பங்களாலும் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களையே அரசாங்கம் கவனத்தில் எடுத்து சட்ட ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் அவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மனித உரிமைகள் செயலணிப் பிரிவு, ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என்பவற்றை நியமித்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், 1996இல் உருவாக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு முழுமையாக செயலிழந்ததொன்று என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதேவேளை மோதல் இடம்பெறும் வடபகுதிக்கு உணவு, மருந்து பொருள்களை தடையின்றி கொண்டுசெல்வதற்கு அதிகாரிகள் அனுமதிவழங்கவேண்டியது அவசியமானது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 10 லட்சம் மக்கள் 1983க்குப் பின்னர் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 8 லட்சம் பேர் தமது வீடுகளுக்குத் திரும்பிச்செல்லாமல் இருக்கின்றனர்.

பலர் திரும்பத் திரும்ப இடம்பெயர்ந்தவாறு உள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த சகலரும் ஆரம்பத்தில் வறியவராக இராதபோதிலும் தற்போது பாதுகாப்பின்மை, அடிப்படையான வசதிகள் இல்லாமை, நீண்டகாலமாக சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்திருக்கின்றமை போன்ற காரணங்களால் தமது சொத்துக்களை இழந்தும் சமூகத் தொடர்புகள் துண்டாடப்பட்டும் வாடுகின்றனர்.

தொடரும் யுத்தத்தால் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 9 லட்சம் சிறுவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சிறார்களில் அநேகமானோர் போராட்டம்தான் தமது வாழ்க்கை என்று மட்டுமே அறிந்தவர்களாக உள்ளனர். வேறு பலர் அகதி முகாம்களில் மட்டுமே வாழ்பவர்களாக இருக்கின்றனர்.

### யுத்தத்துக்கு முடிவு கட்டுதலே வறுமையை ஒழிக்கும் வழி

இலங்கையில் வறுமையை ஒழிக்கவேண்டுமானால் யுத்தத்துக்கு இறுதித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். யுத்தத்தால் மிக அதிகளவில் உடனடியான பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் நீண்டகாலத்துக்கு அதிக விரயத்தை யுத்தம் ஏற்படுத்துகிறது. அரசாங்க செலவினத்தில் ஐந்தில் ஒரு பகுதியை பாதுகாப்புச் செலவினம் ஏப்பமிடுகின்றது. அரசாங்கத்தின் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி யுத்தத்துக்கு செலவிடப்படுகின்றது. இந்த மோதலுக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான சகல முயற்சிகளையும் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை சகல தரப்பினரும் எடுக்கவேண்டும். சமாதானத்துக்கான பாதை மிகக் கடினமானதாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் இருந்தாலும் அரசியல் தீர்வொன்று மட்டுமே இந்தப் பூசலுக்கு நீண்டகாலத் தீர்வொன்றைக் கொண்டுவந்து சுபீட்சத்தை ஏற்படுத்தும்.

பல தசாப்தங்களாக சமூக, இன ரீதியான, அரசியல் ரீதியான குழப்ப நிலையை இலங்கை எதிர்நோக்கி வருகிறது. அரசியல் வாழ்வு மிகவும் துருவமயப்படுத்தப்பட்டுள்ளது. வறுமையில் வாடுவோர் தொகை மிகவும் அதிகரித்துள்ளதால் விரக்தியில் பாதிக்கப்பட்டோரை அதிகளவில் கொண்டதாக இலங்கைச் சமூகம் காணப்படுகிறது.

நகர வாழ்வை மேம்படுத்தும் ஊடகத்துறையின் பங்களிப்பும் அரசாங்கத் துறைக்கு மட்டுமே ஆள்களைச் சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்டமைந்த கல்வி முறைமையும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக இல்லை. ஒரு சிலரே விவசாயத் துறையில் பணியாற்ற விரும்புகின்றனர். இதனால் இளைஞர்கள் மத்தியில் வேலையின்மை அதிகரித்துள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கு தமிழர்கள் மாத்திரமன்று ஏனைய குழுக்களும் தாம் நீதியான முறையில் நடத்தப்படவில்லை என்று கருதுகின்றன. தோட்டப் பகுதிகளில் வாழும் தமிழர்களும், கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் தமக்குச் சம வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கின்றனர்.

மதுப் பாவனை அதிகரிப்பு, குடும்பத்தகராறு, சிறுவர் துஷ்பிரயோகம் என்பனவும் அதிகரித்துள்ள சமூகப் பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தனியார், அரசாங்கத் துறைகளில் ஊழல் நிலவுகிறது. ஊழல் மோசடியைத் தவிர்க்க அரசாங்கம் பகிரங்கத் தன்மையை அதிகரித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

## எல்லைக் கிராமங்களில்

# சிங்கள இளைஞர்கள் புலிகளுடன் இணைவு!

வடக்கு - கிழக்கின் எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்கள இளைஞர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து இராணுவத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று கிராமமக்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் வெளிவரும் 'திவயின' பத்திரிகை இந்தச் செய்தியை நேற்று வெளியிட்டுள்ளது.

கிராம இளைஞர்களும், ஊர்காவல் படை உறுப்பினர்களும் புலிகளுடன் இணைந்து செயற்படுகின்றனர். புலிகளின் உளவுப் பணிகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர். பணத்துக்காகவே அவர்கள் இதில ஈடுபடுவதாக அவர்களின் பெற்றோர் தெரிவித்தனர்.

இதனால் தாங்கள் பெரிதும் பீதியடைந்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர் - இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

# தமிழகம் செல்வதற்காக பலர் மன்னார் வருகை!

தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் கடந்த சில தினங்களாக மன்னார்ப்பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பேசாலை, தலைமன்னார் பகுதிகளுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடும்பங்களாக வந்துள்ள இவர்கள் பயணத்தை எதிர்பார்த்து அங்கு தங்கியுள்ளனர்.

அகதிகளை அனுப்புவது என்ற போர்வையில் பொதுமக்களிடம் பணம் கறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தரகர்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் -

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

எந்தவித குற்றமும் இல்லாத அகதிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டாம் என்று மன்னார் நீதிவான் எம்.இளஞ்செழியன் பொலீஸாரைக் கேட்டுள்ளார்.

(ஐ-3)


BIT

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் BIT (BACHELOR OF INFORMATION TECHNOLOGY) கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள்யாவும் தலைமை அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. உரிய மாணவர்கள் அனைவரும் உடனடியாக தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

Note:- விண்ணப்பப்படிவங்கள் யாவும் 26/07/2000 திகதிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டியுள்ளது.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/12297)

எமது புதிய
ஓடியோ CD வெளியீடு!
இசையருவி
S.A.ராஜ்குமாரின்
இன்னிசையில
★ குபேரன்
வீடியோ எக்கணமி
மியூசிக் கோணர்
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(76670)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
ரஜனி, சௌந்தர்யா,
சிவாஜி, ரம்யாகிருஷ்ணன்
நடிப்பில
படையப்பா
(ரீலீஸ்)
காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/12232)


# யாழ்ப்பாணத்திலும் ஜே.வி.பி. போட்டியிடும்!

கொழும்பு,ஜூலை24

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. யாழ்ப்பாணத்திலும் வேட்பாளர்களை நிறுத்த உள்ளது

அந்தக்கட்சியின் பிரமுகரும், ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டவருமான நந்தன குணதிலக இத்தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண மக்கள் தமது கட்சிக்குக் கூடுதல் வாக்குக்களை அளித்ததால் நாடாளுமன்றத் தேர்தலிலும் அங்கு போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் தமது கட்சிக்கு ஆதரவு பெருகிவருவதாகவும் - இம்முறை கூடுதல் இடங்களைத் தமது கட்சி பெறும் என்றும் - அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், கொழும்பு)

அளவெட்டி வடக்கு கலப்பநாஓடையைப் பிறப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (22-07-2000) சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியினரின் அன்பு மகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சாரதாதேவி (ஆஸ்திரேலியா), மனோன்மணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மு.தையல்நாயகி மற்றும் சி.மீனாட்சிஅம்மா ஆகியோரின் சகோதரனும் சித்தன்கேணி காலஞ்சென்ற ஓவசியர் வேலுப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-07-2000) திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு விலாசம்:
*30/2, பசல்ஸ் ஒழுங்கை,*
***(FUSSEL'S LANE)***
***Wellawatta.***
**T.P: 01-597438** (76677)

தகவல்:
**Dr.** சி.வே.சிறிராஜேஸ்வரன்
(மைத்துனர்)

## திருமதி மரியறோசா அற்புதசீலன்

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியறோசா அற்புதசீலன் 17-07-2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தா.அற்புதசீலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வரப்பிரகாசத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி தாமுவின் அன்பு மருமகளும், யோசப் (ஓய்வுபெற்ற கணக்காளர்), பெஞ்சமின் (A.D. கச்சேரி, திருகோணமலை), புஸ்பமலர், டெய்ஸிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேபிசறோஜா, றோகினி, காலஞ்சென்ற யேக்கப் (W.T.O.,மன்னார்), அந்தோனிப்பிள்ளை (உபதபால் அதிபர், மடுறோட்), செல்வரட்ணம், ராசன், திரவியம், கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், றோசலின் மாலினி(பலாலி ஆசிரிய கலாசாலை மாணவி), சாள்ஸ் நிமலன் (ஆசிரியர், யாழ்ப்பாணக்கல்லூரி), நிரஞ்சன்(மாணவன், தொழில்நுட்பக்கல்லூரி, திருகோணமலை), யாழினி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), சர்மினி (மாணவி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி), நிஷாந்தன் (மாணவன், முருங்கன் ம.வி.) நிதர்ஷா (மாணவி, முருங்கன் ம.வி.) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், அமுதனின் (கல்முனை) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருகோணமலையில் 19-07-2000 அன்று நடைபெற்றது. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான திருப்பலி இன்று (24-07-2000) திங்கள் பி.ப. 5.00 மணியளவில் (புதிய நேரம்) மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (76673)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா கண்ணுத்துரை

(இளைப்பாறிய சாலைப்பரிசோதகர்,
இ.போ.ச. பருத்தித்துறை)

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு கலைமகள் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கண்ணுத்துரை நேற்று (23-07-2000) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தவமணி தம்பதியினரின் புதல்வனும் சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற தாதியர் உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் **Dr.** வனஜராணி (ஆஸ்திரேலியா), சந்திரமோகன் (இ.போ.ச.நடத்துநர் கோண்டாவில் சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் **Dr.** சபேசன் (ஆஸ்திரேலியா), துஷ்யந்தி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அச்சுதனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-07-2000) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு அளவெட்டியில் நடைபெற்றுப் பூதவுடல் கொட்டுப்பனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(76674)

தகவல்:
சரஸ்வதி
(மனைவி)

## சின்னக்குட்டி சிவசுப்பிரமணியம்

காரைநகர் கனபூமியைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெலுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (22-07-2000) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்பு மகனும் லக்சுமியின் அன்புக் கணவரும் கருணானந்தவல்லி, சிவநேசவல்லி, முருகதாஸ், கலைவாணி, பரமவம்சராசன் ஆகியோரின் அருமைத் தந்தையும் சுந்தரம்மா, அன்னபூரணம், காலஞ்சென்ற சிவயோகம், இளம்தலைசிங்கம் (கோகிலன் ஸ்ரோர்ஸ், வவுனியா) ஆகியோரின் சகோதரனும் இராசா கந்தையா, சண்முகலிங்கம், அம்பலவிமுருகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (23-07-2000) ஞாயிற்றுக்கிழமை வவுனியா வேப்பங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

*இல.607, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (76676)

தகவல்:
கந்தையா சுந்தரஅம்மா

நாவாந்துறைப் படிப்பகம்

# ஐ. நா. தடையை மீறியதற்காக இந்திய கப்பலை குவைத் பிடித்தது

ஈராக் மீதான ஐ. நாவின் தடைகளை மீறியதாகக் கருதப்படும் இந்தியக் கப்பல் ஒன்றை குவைத்தின் கடலோரக்காவல் படை தடுத்து வைத்துள்ளது.

அத்துடன் இந்தியக் கப்பலுக்குத் துணையாகச் சென்ற ஐக்கிய அரபு எமிரேட்டின் இரண்டு படகுகளையும் குவைத் கடற்படை பிடித்துள்ளது.

இந்தக் கப்பல் 25 தொன் டீசலை ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு ஏற்றிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்த ஈராக் மீது ஐ. நா. பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

இதன்படி ஈராக் தனது எண்ணெய் உற்பத்தியில் குறிப்பிட்ட அளவை மட்டுமே ஐ. நா. அனுமதியுடன் ஏற்றுமதி செய்ய முடியும்

ஆனால் இந்தியக் கப்பல் ஏற்றிச்சென்ற டீசலை ஐக்கிய அரபு எமிரேட்டிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி எதுவும் பெறப்படவில்லை

ஆகவே இந்தக் கப்பல்களை குவைத் தடுத்துக் கைப்பற்றியுள்ளது.

# சனத்தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 24

இந்தியா எதிர்வரும் 2020 ஆம் ஆண்டிற்குள் சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது

இதற்காகத் தேசிய சனத்தொகைக் கட்டுப்பாட்டு நிதியம் ஒன்றை அமைத்துள்ள அரசு, இந்த நிதிக்காக நிறுவனங்கள் மற்றும் தனியார் பெருமளவில் பணம் தந்து உதவவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-ஒ)

# இராணுவ ஆட்சிக்கு எதிராக நவாஸ் ஷெரீப் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஜூலை 24

பாகிஸ்தானிய அரசியலில் இருந்து தன்னை ஒழித்துக்கட்டும் முயற்சியில் இராணுவ ஆட்சியாளர் தீவிரமா இறங்கியுள்ளதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் குற்றஞ் சாட்டியுள்ளார்.



நீண்டகாலச் சிறைத்தண்டனைகளும் அரசியலில் ஈடுபட முடியாதவாறு பலதடைகளும் திட்டமிட்டுத் தனக்கு விதிக்கப்படுவதாகவும் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஷெரீப் மீதான ஊழல் வழக்கொன்றில் 14 ஆண்டுகள் சிறையும் 21 ஆண்டுகள் அரசியலில் பதவிகள் வகிக்கத் தடையும் விதிக்கப்பட்டதற்கு எதிராக அவரின் முஸ்லீம் லீக் கட்சி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

(இ-ஒ-5)

### பால்தக்கரேயின் ஆதரவாளரான

# இந்திய சட்டத்துறை அமைச்சர்

# ராம் ஜெத்மலானி ராஜினாமா!

## பதவி விலகலுக்கு பிரதமர் ஒப்புதல்

புதுடில்லி, ஜூலை 24

இந்தியச் சட்டம் மற்றும் நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சர் ராம் ஜெத்மலானி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்

பிரதமரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் ஜெத்மலானியின் பதவிவிலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டார்!

மும்பை மதக்கலவரம் குறித்த வழக்கொன்றின் தீர்ப்பில் 'மத்திய அமைச்சர்கள் இரண்டுவிதமாகப் பேசுகிறார்கள்' என்று கூறிய நீதிபதியின் 'கருத்துக்கு' சட்டங்களை அறிந்த ஓர் அமைச்சரைப் பற்றிக் கூறுகிறோம் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்று ஜெத்மலானி பதில் கூறியதாகவும் இதனாலேயே பிரதமர் ராஜினாமாக் கடிதத்தைக் கேட்டு வாங்கியதாகவும் கூறப்படுகிறது.

சிவசேனையின் ஆதரவுடன் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெத்மலானி, மகாராஷ்டிர அரசு பால்தக்கரே மீது வழக்குத் தொடர அனுமதி அளித்ததைப் பகிரங்கமாகக் கண்டித்து வந்ததையே நீதிபதி குறிப்பிட்டதாகக் கருதப்படுகிறது.

ஏற்கனவே சிவசேனையைச் சேர்ந்த அமைச்சர்கள் பதவி விலகியிருந்ததை அடுத்து ஜெத்மலானி ராஜினாமா பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் மகாராஷ்டிர சட்டமேலவைத் தேர்தலில் போட்டியிடும் சிவசேனை பாரதியஜனதாக் கூட்டணியில் பிளவு வரலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து மத்திய அமைச்சர் பிரமோத் மாகாஜன் பால்தக்கரேயை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதற்கிடையில் மும்பையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பால்தக்கரே எந்த நேரமும் கைதாகலாம் என்று கூறப்படுகிறது.

இதேசமயம் —

சிவசேனைத்தலைவர் பால்தக்கரே சட்டப்படி நடக்கப் போவதாகவும் நீதிமன்ற உத்தரவுகளை மதிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(இ-ஒ)

### உலக அரங்கில்

# மாநில சுயாட்சி குறித்து ஆராய மார்க்சிஸ்ட் கட்சி மாநாடு

சென்னை, ஜூலை 24

இந்திய மாநிலங்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு அனைத்துக் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்றை நடத்த உள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் முதல்வாரத்தில் கூட்டப்படும் என்று அக் கட்சியினர் தெரிவித்தனர்.

காஷ்மீர் சுயாட்சிக் கோரிக்கையை அடுத்து இந்தியாவில் மாநில சுயாட்சி முக்கியத்துவம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பிரதமரைக் கொல்ல முயற்சி; பங்களாதேஷில் 3 பேர் கைது

டாக்கா, ஜூலை 24

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை வெடிகுண்டு வைத்துக் கொல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் 3 பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஹசினாவின் சொந்த ஊரான கோபல் கன்ஞ் என்ற ஊரில் நடக்கவிருந்த ஒரு கூட்டத்தில் பிரதமர் கலந்து கொள்வதாக இருந்தது.

கூட்டம் நடைபெறுவதற்கு முதல் பொலீஸார் பாதுகாப்புச் சோதனைகளை அங்கு மேற்கொண்ட போது மேடையின் அருகில் பிரதமரைக் கொல்லத்தக்க வகையில் 76 கிலோ எடையுள்ள ஒரு வெடிகுண்டு தரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தனர்.

உடனடியாகத் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட பொலீஸார் இது சம்பந்தமாக 3 பேரை கைது செய்தனர்..

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; 7 பேர் கொல்லப்பட்டனர்

இஸ்லாமாபாத், ஜூலை 24

பாகிஸ்தானில் வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற மூன்று குண்டு வெடிப்புகளில் 7 பேர் கொல்லப்பட்டனர், 26 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்குப் பகுதி நகரான குவெட்டாவில் உள்ள ஒரு வர்த்தக நிலையம் மற்றும் இரண்டு பொலிஸ் நிலையங்கள் அருகில் இந்தக் குண்டுகள் வெடித்தன

இந்தக் குண்டு வெடிப்புகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பாகிஸ்தான் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-ஒ-5)

# பாரதீய ஜனதாக் கட்சிக்கு தமிழர் ஒருவர் தலைவராகிறார்

புதுடில்லி, ஜூலை 24

இந்தியாவில் தென்னகத்தைச் சேர்ந்த தமிழரான ஜனா. கிருஷ்ணமூர்த்தி பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.

வடஇந்திய மாநிலங்களில் சக்தி வாய்ந்த கட்சியாக உள்ள பாரதீய ஜனதா தெற்கு மாநிலங்களில் காலூன்றினாலும் பலம்பெற முடியவில்லை.

ஆகவே இந்தக் குறைபாட்டை நீக்குவதற்காகத் தற்போது அந்தக் கட்சியின் துணைத் தலைவராக உள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஜனா. கிருஷ்ணமூர்த்தியை தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்க மூத்த தலைவர்கள் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனா. கிருஷ்ணமூர்த்தி 40 ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-ஒ-5)

# ஏவுகணைப் பரிசோதனையில் அமெரிக்கா வெற்றி அடைந்தது

வாஷிங்ரன் ஜூலை 24

நியூ மெக்ஸிக்கோவின் மேல் வான்பகுதியில் நடத்திய ஏவுகணை எதிர்ப்புச் சோதனை வெற்றிகரமாக முடிந்ததாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனையின்போது பலஸ்டிக் மற்றும் குரூஸ் ரக ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட எதிர்ப்பு ஏவுகணை சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

சில வாரங்களின் முன்பு அணுகுண்டைத் தாங்கி வரும் றொக்கெட்டை எதிர்த்து வானிலேயே அழிக்கும் 10 கோடி டொலர் செலவிலான அமெரிக்காவின் எதிர்ப்பு ஏவுகணைத் திட்டச் சோதனை படுதோல்வியடைந்ததை அடுத்தே இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது

(இ-ஒ-5)

# துணைக்கோள் கண்டு பிடிப்பு

புதுடில்லி, ஜூலை 24

வியாழன் கிரகத்தைச் சுற்றி வரும் 17 ஆவது சந்திரனை வானவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்,

கடந்த 20 ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது துணைக்கோள் இதுவாகும். (இ-ஒ)

# கடலில் படகு கவிழ்ந்ததில் 4 பெண்கள் உட்பட 5 பேர் பலி

சென்னை, ஜூலை 24

மாமல்லபுரம் கடற்பகுதியில் மீனவர் படகு ஒன்று கவிழ்ந்ததில் 4 பெண்கள் உட்பட 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். காப்பாற்றப்பட்ட நால்வர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்த சுற்றுலாப் பயணிகள் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

மகாபலிபுரம் கடலில் கற்பாறைகள் அதிகம் இருப்பதால் படகுப்பயணம் அப்பகுதியில் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் பணத்திற்கு ஆசைப்படும் மீனவர்கள் உல்லாசப் பயணிகளை சிறிய மீன்பிடிப்படகுகளில் ஏற்றிச் செல்வது வழக்கம். அப்படிச் சென்றவர்கள்படகுகவிழ்ந்து இறந்துள்ளனர்.

(இ)

## உதவிகள்

தமிழகத்திற்கு வரும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் நிவாரணப் பொருள்களும், உதவிகளும் வழங்கப்பட உள்ளன. (ஐ-ஒ)

# படைகளைக் குறைக்க முடிவு

டோக்கியோ, ஜூலை 24

ஜப்பானின் ஒகினோவா தீவில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்தில் உள்ள வீரர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவு குறைப்பதாக அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் உறுதி அளித்தார்.

அமெரிக்கப் படையினரின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட ஒகினோவா மக்கள், கிளின்ரனின் ஜப்பான் விஜயத்தின்போது தீவிர ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். இதனை அடுத்தே அமெரிக்க அதிபர் மேற்கண்ட உறுதியை அளித்தார்.

(ஒ)

# வறிய நாடுகளின் சிரமங்களைக் குறைக்க ஜி-8 மாநாட்டில் முடிவு

டோக்கியோ, ஜூலை 24

ஜப்பானில் நடைபெற்ற செல்வந்த நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட ஜி- 8 மாநாட்டில் வறியநாடுகள் கடன் சுமையால் சிரமப்படாமல் இருக்க பொருளாதார கொடுக்கல் வாங்கல்களைச் சீர்ப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டு இறுதிக்குள் உலக வாணிபம் குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதேசமயம் வறிய நாடுகளின் கடன்களை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை குறித்து இந்த மாநாட்டில் எந்தவித முடிவும் எடுக்கப்படாதது குறித்து ஐ. நா. செயலர் கோபிஅனான் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

செல்வந்த நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் வறிய நாடுகளின் பிரச்சினை குறித்து ஆலோசிக்கப்பட்டதே தவிர முக்கிய பிரச்சினைகள் குறித்து தீர்க்கமான உதவி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று கருதப்படுகிறது.

இந்த மாநாடு ஆரம்பிக்கும் முன்னர் நைஜீரிய அதிபர் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் வறிய நாடுகள் பெற்ற கடன்களை ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டிருந்தனர்.

(இ-ஒ)

# புதிய அரசமைப்பு மூலம் நாடு பிளவுபடும் ஆபத்து!

## அமரபுர பீடாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24

''புதிய அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் சட்டமாக்கப்பட்டால் நாடு இரண்டாகப் பிரியும் 'ஈழம்' உருவாகும் நிலை ஏற்படும்''.

இவ்வாறு எச்சரித்துள்ளார் அமரபுர பீடாதிபதி வண. படிகே பஞ்ஞாசிகதேரர்.

அரசுக்கும் — ஐ.தே.கட்சிக்கும் இடையில் இணக்கம் காணப்பட அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளைச் சட்டமாக்குவதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வரும் இரண்டு கட்சிகளும் அரசமைப்பை அமுல் படுதது வதன் மூலம் நாட்டுக்குத் துரோகம் இழைக்கின்றன.

புதியஅரசமைப்பைச் சட்டமாக்க வெளிநாடுகளின் ஆதரவையும் தமிழ்க் கட்சிகள் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றன. எனவே இதனை அனுமதிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-க-7)

## இடம் பெயர்ந்தோருக்கு 300 குடிசைகள் அமைப்பு

நெல்லியடி ஜூலை 24

தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கு 'கெயர்' நிறுவனம் 300 குடிசைகளை அமைத்து வருகின்றது.

சாத்தாவத்தையில் 40குடிசைகளும், தியாகர் முகாமில் 30 குடிசைகளும், நகர சபை வீதியில் 20 குடிசைகளும் சாவற்காட்டில் 50 குடிசைகளும், பிப்பிலிப் பகுதியில் 50 குடிசைகளும், நவாலி வடக்கில் 15 குடிசைகளும், முள்ளிஆனைக்கோட்டையில் 50 குடிசைகளுமாக,300 குடிசைகளை துரித கதியில் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை 'கெயர்' நிறுவன செயல்திட்ட இணைப்பாளர் எச். ஏ அருள்ஞானம் தெரிவித்துள்ளார். (ஐ-109)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு.

**க. சோமசுந்தரம்** அதிபர் (J.P)

கரவெட்டி யார்கரு விநாயகர் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும், விக்னேஸ்வராக் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்று, பதின்மூன்று வருடம் ஆசிரியராகவும் இருபத்தைந்து வருடம் அதிபராகவும் சேவையாற்றியதுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பருத்தித்துறை கிளைச் செயலாளராகவும்.பின் இலங்கை வித்தியாலய அதிபர் சங்கச்செயலாளராகவும் தலைவராகவும் சேவையாற்றிய உயர்திரு க. சோமசுந்தரம் (J. P.) அளவெட்டி சதானந்த வித்தியாலய அதிபர் அவர்கள், கல்விச்சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையும் இலங்கை முழுவதற்கான சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம்

(76671)


## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை கனகரத்தினம்

(லங்கா லிமிட்டெட் சிமெந்து தொழிற்சாலை)

சுன்னாகம் தில்லைகட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகக்கொண்டவருமான ஐயாத்துரை -கனகரத்தினம் நேற்று (23—07— 2000) ஞாயிற்றுக்கிழமை காலை மரணமானார்.

அன்னார் காலம் சென்ற ஐயாத்துரை - சுந்தரத்தின் அன்பு மகனும், மங்களநாயகியின் அன்புக் கணவரும், கஜந்தன் (யூனியன் கல்லூரி 2002 A/L), கஜீவன் (யூனியன் கல்லூரி தரம் 9) ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்கையற்கரசி, கருணாகரன், குமுதினி ஆகியோரின் சகோதரரும், ஐயாத்துரை - செல்லம்மாவின் மருமகனும், கேசராணி, கலாநிதி, சந்திரப்பிறேமா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இறுதிக் கிரியைகள் இன்று (24 07 — 2000) திங்கட்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மங்களநாயகி
(மனைவி)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (76669)

### திருமதி ரவீந்திரன் இன்பம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரவீந்திரன் இன்பம் 22-7-2000 அன்று வவுனியாவில் அகாலமரணமானார்.

அன்னார் ரவீந்திரனின் அன்பு மனைவியும், சிவஞானம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. சிவசுத்தானந்தன் (சிவா)
(அண்ணன்)

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு (76672)

## சமய சந்நிதிகளில்

நெல்லியடி, ஜூலை 24

பொலிகண்டி ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவம்நடைபெற்று எதிர்வரும் 31 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் ஓகஸ்ட் 2 ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும்.

(ஐ-109-30)

★ ★ ★

சுதுமலை அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஆடி உற்சவமும் இலட்சார்ச்சனையும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. இந்த உற்சவம்10நாள்களுக்கு இடம்பெறும். இறுதி நாளான அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை சுவாமி வெளி வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். (ஐ-9)

★ ★ ★

புலோலி அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறைஸ்ரீசிவன்(கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10தினங்கள் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழாஅடுத்தமாதம் எதிர் வரும் முதலாம் திகதி காலையும், தீர்த்தத்திருவிழா மறுநாள் காலையும் நடைபெறும். (ஐ-30)

# பண்டா ஆட்சியின் பின்னரே நாடு வீழ்ச்சிப் பாதையில்!

## கருணசேன கொடித்துவக்கு கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24

''இலங்கையில் பண்டாரநாயக்காவின் ஆட்சியின் பின்னரே நாடு வீழ்ச்சிப்பாதையை நோக்கிச் சென்றது. அவரால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச்சட்டமும் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாததுமே இன்று தமிழர்கள் தனிநாடு கோரும் சூழ்நிலையை உருவாக்கியது''

என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமேல்மாகாண ஆளுநருமான கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் குருநாகலிலுள்ள மாலபே மானிட அபிவிருத்தி மையத்தில் நடைபெற்ற குருநாகல் மாவட்டப் பத்திரிகையாளர்களுக்கான கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்

'' அமைதியாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களை தனிச் சிங்களச் சட்டமே குழப்பியது இதனால் இன்று நாடு பிளவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று அரசு பலவழிகளிலும் மக்களின் பணத்தை வீணாக்கிவருகின்றது.

இடதுசாரிக்காரர்கள் பசப்பு வார்த்தைகளால் மக்களை ஏமாற்றி நாட்டை ஏழ்மை நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர். இன்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உதவி வழங்கத் தயங்குகின்றன. பல ஐரோப்பிய நாடுகள் நேர்மையான தேர்தலை நடத்தக்கோரி ஜனாதிபதியைக் கேட்டுள்ளன. சர்வதேச சமூகத்தின் பார்வையில் இருந்து ஒருவரும் தப்பமுடியாது'' என்றார்.

(ஐ)

## லயன்ஸ் கழக பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம் ஜூலை 24

உரும்பிராய் லயன்ஸ்கழகத்தின் புதிய நிர்வாக சபையின் பதவியேற்பு வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

கழகத்தின் முன்னாள் தலைவர் சி. பாலகிருஷ்ணன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-3)

# மாணவருக்கு எதிரான படையினரின் நடவடிக்கை குறித்து விசாரிக்குக!

## பாடசாலை அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 24

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்தும் அல்வாய் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது குறித்தும் உடனடி விசாரணைகளுக்கு உத்தரவிட்டுசம்பந்தப்பட்டவர்கள் மீதுகடும் நடவடிக்கை எடுக்குக.

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் (கொழும்புக் கிளை) வடக்கு —கிழக்கு பாடசாலைகளின் சம்மேளனமும் தமிழர் பணிக்குழுவும் ஜனாதிபதியிடம் இவ்வாறு கோரியுள்ளன. இது தொடர்பாக இந்த அமைப்புகள் ஜனாதிபதிக்குக் கடிதங்களை அனுப்பி உள்ளன.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குமாணவர்கள் தம்மைத் தயார் செய்து கொண்டிருக்கையில் யாழ். இந்து மாணவன் எஸ். சஞ்சீவன் படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்திருப்பது தமிழ் மாணவர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற அதேநேரம் வடமராட்சிப் பகுதியில் மாணவி ஒருவர் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தமிழ் மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல பெற்றோர் மத்தியிலும் பெரும் பயப்பீதியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிக்ழ்வுகள் தமிழ் மாணவர்களது கல்வியையும் கல்வி மீதான ஆர்வத்தையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது. இது தொடர்பாக சுதந்திர விசாரணைக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் விசாரணைகள் மட்டும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. எனவே அரசும், இராணுவ உயர் பீடமும் படையினரின் நன்னடத்தைகளை வலியுறுத்தாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு இந்த அமைப்புகள் ஜனாதிபதிக்கும், கல்வி அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் தெரிவித்துள்ளன.

(ஐ)

## ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில்

## 250 ஆசிரிய பயிலுநருக்கு நியமனம் வழங்கப்படவில்லை

கொழும்பு, ஜூலை 24

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் மூன்று வருட ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்ட 250 ஆசிரிய பயிலுநர்களுக்கு இது வரையும் நியமனம் வழங்கப்படவில்லை.

1996 —99ஆம் கல்வி ஆண்டில் இணைக்கப்பட்ட சம்பந்தப்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் இரண்டு வருட காலம் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியும் ஒரு வருட காலம் வெளிக்களப் பயிற்சியினையும் நிறைவு செய்து சுமார் 7 மாதங்கள் கடந்துவிட்ட போதும் இது வரை ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கான ஆசிரிய நியமனம் கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் என்று கல்லூரியின் பீடாதிபதி எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

(ஐ-5)

## மாணவருக்கு அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 24

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இருந்து ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அனுமதி அட்டைகள் நாளை மறுதினம் புதன்கிழமை கோண்டாவிலில் இயங்கும் கல்லூரியிலும் (நிரு கல்வி நிலையம்) நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் பாடசாலை நேரத்தில் வழங்கப்படும் என்று கல்லூரி அதிபர் எம். நாகேந்திரராஜா அறிவித்துள்ளார்.

(ஐ-3)

## உதயன்

### பூஞ்சோலைப் பாம்புதானா?

பொதுத் தேர்தல் காலம் நெருங்குகிறது. அதனை நினைக்க முந்திய தேர்தல் காலத்து மேடைப் பேச்சு ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. சுதந்திரக் கட்சி புற்றுப் பாம்பு என்றால் ஐக்கிய தேசியக் கட்சி பூஞ்சோலைப் பாம்பு என்று குடாநாட்டுத் தேர்தல் மேடைகளில் பேச்சாளர்கள் அக்காலத்தில் முழங்கியதுண்டு. அதாவது தமிழர்களுக்கு, அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் நச்சுத்தனம் கொண்டவையே என்பதனை அவர்கள் அவ்வாறு வர்ணித்து வந்தனர்.

மேற்குறிப்பிட்ட இரண்டு கட்சிகளுமே இப்போதும் தென்னிலங்கையின் பிரதானமான அரசியல் கட்சிகளாக - மக்கள் ஆதரவு அதிகம் கொண்ட கட்சிகளாக - விளங்குகின்றன. தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, கடந்த 40 வருடங்களுக்கு மேலாக எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்து நாடு இன்றைய நெருக்கடியை எதிர் நோக்குவதற்கு இந்த இரண்டு கட்சிகளுமே காரணம்.

ஒருகட்சி ஆட்சியில் அமர்ந்திருக்கும் போது தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சி மேற்கொண்டால், அடுத்த கட்சி தனது அரசியல் லாபம் கருதி அதனைத் தூக்கிப் பிடித்துக்காட்டி, நாடு பறிபோகப் போகிறது என்று ஓலம் வைத்துத் தடுத்துவிடும். இரண்டு கட்சிகளுமே இதில் மிகவும் கைதேர்ந்தவை; வல்லமை உடையவை. இரண்டு கட்சிகளுமே பேரினவாதச் செல்வாக்குக்கு ஆட்பட்டவை.

தமிழர் பிரச்சினைக்கான - இனப்பிரச்சினைக்கான - கடந்த கால தீர்வு முயற்சிகளை நோக்கின், ஆழமாக ஆராய்ந்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இனவாதக் கட்சியாகத் தோற்றம் கொண்டாலும், செயற்பட்டாலும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெயரளவிலேனும் முயற்சிகளை மேற்கொண்டது. அப்போதெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி முட்டுக்கட்டை போட்டு அந்த முயற்சிகளை முறியடித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியோ தன்னை ஒரு தேசியக் கட்சியாகக் காட்டிக்கொண்டாலும், தமிழர் பிரச்சினைத்தீர்வு விவகாரத்தில் எப்போதும் குள்ளத்தனமாகவே நடந்து கொண்டது. தமிழர் வாக்குகளை அள்ளுவதற்காக அவர்களுக்குச் சார்பாகப்பேசி - தேனொழுகும் வாக்குறுதிகளைக் கொடுத்து - தனது காரியத்தை ஆற்றிக்கொண்டது.

ஆனால் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்குப் பின்னடிக்கும் போக்கையே எப்போதும் கடைப்பிடிப்பதுண்டு. அதனால் அது ஒரு பூஞ்சோலைப் பாம்பு எனலாம். பூஞ்சோலைப் பாம்பிடமும் நச்சுத்தனம் இருக்கவே இருக்கிறது!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்திரிகா அரசு இப்போது எடுக்கும் முயற்சியின் போதும் ஐக்கிய தேசியக்கட்சி பூஞ்சோலைப் பாம்பாகவே நடந்து கொள்கிறது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாயின் ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்படுவது மிக அவசியம். அதேபோன்று இணைந்திருக்கும் வடக்கு-கிழக்கு பிரிக்கப்படாதிருப்பதும் பிரதானம். இந்த இரண்டு அம்சங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பாகவே உள்ளது.

இவையிரண்டுக்கும் வகை செய்யும் திருத்தங்களைச் செய்வதற்குத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளிடம் கூறியுள்ளார். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி திருத்தங்களுக்கு இணங்கவேண்டும் என்பது அவரின் நிலைப்பாடு.

ஜனாதிபதிக்கோ தாம் தனித்துச் செய்ய முற்பட்டால் வாக்கு வங்கி தேய்ந்து போய்விடும் என்ற அச்சம். புதிய தீர்வுத் திட்டத்தில் தமிழ்க் கட்சிகள் கேட்கும் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து மூன்று தரப்புக்களும் அமர்ந்து பேசுவது என்ற ஆலோசனையையும் ஐக்கிய தேசியக்கட்சி ஏற்காமல், தட்டிக்கழித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அதற்கு இதய சுத்தி உள்ளதா இல்லையா என்பது வேறுவிடயம். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இப்போதும் ஒரு பூஞ்சோலைப் பாம்பாகவே உள்ளது.

# களுத்துறைக்கு இடம் மாற்றப்பட்ட கைதிகளை மீண்டும் இங்கு கொண்டுவருவதில் தாமதம்

## விசாரணைகள் ஒத்திவைப்பு

அண்மைக்கால அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்ட யாழ்.சிறைச்சாலைகள் கைதிகள் மீதான வழக்கு விசாரணைகள் மீண்டும் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதிலும் அவர்கள் சமுகமளிக்காததால் விசாரணைத் தவணைகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சமயம் குடாநாட்டில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து மேற்படி விளக்க மறியல் கைதிகள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் குடாநாட்டில் தற்போது நீதிமன்றங்கள் இயங்க ஆரம்பித்துள்ளபோதும் இடம்மாற்றம் செய்யப்பட்ட கைதிகள் எவரும் களுத்துறைச் சிறைச்சாலை அதிகாரிகளினால் மீண்டும் இங்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

யாழ். நீதிமன்றத்தால் மேற்படி சந்தேகநபர்கள் மீதான வழக்குகள் மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டுள்ளன. குறித்த தவணையில் நீதிமன்றத்தில் ஆஜராகும் யாழ். சிறை அதிகாரிகள் வழக்கின் சந்தேகநபர்கள் இன்னும் களுத்துறைச் சிறையிலிருந்து வந்து சேரவில்லை என்று தெரிவித்து புதிய தவணையைப் பெற்றுச் செல்கின்றனர்.

இது தொடர்பாக யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இடம்மாற்றம் செய்யப்பட்ட கைதிகளை மீண்டும் இங்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு குறித்த சிறைச்சாலை அத்தியட்சகர்கள் மற்றும் கொழும்பு உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு யாழ். நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பல கட்டளைகளைத் தாம் அனுப்பிவைத்துள்ளதாகவும் -

எனினும் தென்பகுதி அதிகாரிகள் கைதிகளை இடம்மாற்றம் செய்யும் விடயத்தில் பாராமுகமாகச் செயற்படுவதாகவும் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட சிறை அதிகாரிகளுக்கு யாழ். பொலீஸ் நிலையம் ஊடாகவும் கைதிகள் இடம்மாற்றம் சம்பந்தமான கட்டளைகள் அனுப்பப்பட்டதாக யாழ். சிறைச்சாலை பதில் அத்தியட்சகர் எஸ்.சிவசுந்தரம் தெரிவித்தார்.

குறித்த தவணைக்குத் தமது பிள்ளைகளை யாழ். நீதிமன்றத்துக்கு அழைத்துவருவார்கள் என நினைத்து நீதிமன்றத்தை முற்றுகையிடும் உறவினர்கள், அவர்கள் அழைத்துவரப்படாததால் சோகத்துடன் வீடு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் இங்கிருந்து இடம்மாற்றம் செய்யப்பட்ட பத்து சந்தேகநபர்கள் மீதான வழக்குகள் எதிர்வரும் ஒக்ரோபர் 23ஆம் திகதி விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

குமாரசாமி உதயசூரியன் புனித இன்பராசா (பொற்பதி வீதி, கொக்குவில்), தேவநாயகம் றொனால்ட் தேவசுதன் (மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்), நடராசா குனேஸ்வரன் (கடற்கரை வீதி, ஈச்சமோட்டை), சின்னத்தம்பி தியாகராசா (சீனிவாசன் வீதி, கொட்டடி), தியாகராசா கமலாதேவி (கொட்டடி), தியாகராசா சதானந்தன் (கொட்டடி), தியாகராசா ராஜிகா (கொட்டடி), கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), குமாரவேல் லெட்சுமி (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), டக்ளஸ் ஜெனோ (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் வழக்குகளே விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கட்டளைகள் யாழ். நீதிமன்ற உத்தரவுப்படி களுத்துறைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். சிறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - மேற்படி இடம்மாற்றம் செய்யப்பட்ட கைதிகள் மீண்டும் இங்கு அனுப்பிவைக்கப்படாததற்கான காரணம் எதுவும் தமக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் யாழ். சிறை அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-9)

### யாழ்.நவீன சந்தை:

# சுகாதார சீர்கேடுகள் குறித்து முறையிடுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ். மாநகரசபையின் கண்காணிப்பில் உள்ள யாழ்ப்பாணம் நவீன சந்தைப் பகுதியில் ஏற்படுகின்ற அசௌகரியங்கள், சுகாதாரச் சீர்கேடுகள் என்பவற்றை அங்கு கடமையாற்றுகின்ற மாநகரசபையின் அதிகாரியிடமே முறைப்பாடு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீனசந்தையின் உட்பகுதி மற்றும் நடைபாதைகளில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் அங்கு பாவனையில் உள்ள மலசலகூடத்தின் சுகாதாரம் என்பன பற்றித் தெரியப்படுத்தினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை அங்குள்ள வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மலசலகூடங்களைப் பாவிக்கின்றபொழுது சுகாதாரத்தைப் பேணுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-10)

### மாணவருக்கு அனுமதி

அண்மையில் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து வலிகாமம் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள கைதடி 'இரட்சணிய சேனை' இல்லத்தைச் சேர்ந்த சுமார் 15 மாணவர்கள் மல்லாகம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றனர். (இ-10)

### கொப்பறா உற்பத்தி

நெடுந்தீவில் இம்முறை மிகவும் கூடுதலான அளவில் கொப்பறா உற்பத்தியில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

மிகவும் அதிகஅளவிலான தேங்காய் உற்பத்தியும், தேங்காய் உற்பத்தியாளர்கள் வெளியிடங்களுக்கு அவற்றை எடுத்துச் சென்று விற்பனை செய்யமுடியாமற் போனதும் இதற்குக் காரணம் ஆகும். (இ-11)

# மண்ணை வாழவைக்கும் வண்ணை அன்னையின் விழா

'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' என்பது சம்பந்தப்பெருமானின் அருள் வாக்கு. அத்தகைய நல்வாழ்வுக்கு வழிகாட்டுவன சமயங்கள். சமயமும் மனிதவாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. வாழ்வின் ஆரம்ப நாள்முதல் இறுதி நாள் வரை சமய நெறிகள் மக்கள் மத்தியில் பரவி நிற்பதைக் காணலாம். சமயத்தின் முக்கிய நிலைக்களனாகவுள்ள ஆலயங்கள் வழிபாட்டுக்கு மட்டுமன்றி மக்கள் மத்தியில் வேற்றுமையில் ஒற்றுமை, அன்பு, சமத்துவம் சகிப்புத்தன்மை போன்றவற்றை வளர்த்து வரும் ஸ்தாபனங்களாகவும் விளங்குகின்றன.

நம் தமிழீழ மண்ணின் வரலாற்றை எடுத்துக் காட்டும் பழம்பெரும் ஆலயங்களில் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயமும் ஒன்றாக, சிறப்பித்துப் பேசப்படுகின்றது. நம் மண்ணின் பெருமைக்கும், சமய வரலாற்றின் சிறப்புக்கும் அது சான்று பகர்கிறது. இத்தகைய ஆலயங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது சைவமக்கள் கடனாகும்.

தமிழகத்தில் இருந்து வந்த கோபால செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் வம்சத்தாரால் புள்ளிருக்கும் வேலூர் ஆலய அமைப்பிலே இவ்வாலயம் அமைக்கப்பட்டு நிர்வாகம் நெறிப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தின் முதல் கும்பாபிஷேகம் 1790ஆம் ஆண்டில் நடைபெற்றதாக ஆலய வரலாறு கூறுகின்றது. நாவலரது முதல் சொற்பொழிவு ஆரம்பமானது இவ்வாலயத்தின் வசந்த மண்டபத்திலேயாகும்.

ஆலயங்களில் நடைபெறும் ஆகமக் கிரியை வழிபாடுகளும் பல தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கியவையாகும். கிரியைகள் நித்திய, நைமித்திய, காமிகம் என மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன. நித்திய கிரியைகளான பூசைகள் வழிபாடுகள் ஆகியவற்றில் ஏற்படும் குறைவுகளை நிறைவு செய்வதற்காகவே நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றன. நைமித்திய கிரியைகளில் மஹோற்சவம் சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

பஞ்சகிருத்தியங்களை இறைவன் நடத்தும் பாவனையாக மஹோற்சவத்தை சித்தாந்தக் கருத்துக்கள் கூறுகின்றன.

மஹோற்சவம் என்பதன் பொருள் மேலான செல்வம் எனப்படும். சகல ஜீவான்மாக்களும் கடைத்தேற அருட்செல்வத்தை அள்ளித் தருதற்காக கொடியேற்றம் முதல் தீர்த்த நாள் வரை பரமான்மா ஆகிய இறைவன் திருக்கோலக் காட்சி தருவதே மஹோற்சவம்.

மண்ணில் பிறந்தார் பெரும் பயன் கண்ணினால் நல்விழாப் பொலிவு காண்டல் என்பதை பெரிய புராணம் எடுத்துக் கூறுகின்றது. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவம் ஆடிமாத பூரத்தை தீர்த்த நாளாகக் கொண்டு பத்து நாள்கள் நடைபெறுகின்றது. சுவாமி மஹோற்சவம் பங்குனி உத்தரம் தீர்த்த நாளாகக் கொண்டு முதல் 17 தினங்கள் நடைபெறும். இன்று ஆரம்பமாகும் தேவி மஹோற்சவத்தில் அம்பிகை தையல்நாயகி தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு தேடி வந்து அருள் செய்து பாவ வினைகள் ஓடி விட அருள் செய்வாள்.

இரதோற்சவம், சப்பறக்காட்சி, சித்தாமிர்த புஷ்கரிணியில் தீர்த்தோற்சவம் கண்கொள்ளாக் காட்சியாக அமையும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வண்ணை பாலாம்பிகை தாள் வழுத்துவோமாக. மண்ணை வாழ வைக்க அருள்தரும் வண்ணை தையல் நாயகியின் மஹோற்சவத்தின் சிறப்பை உணர்ந்து அதில் பங்கேற்போமாக.

சிவஸ்ரீ. சோ. இ. பிரணதார்த்தி ஹரக் குருக்கள்.

### நகர சுத்திகரிப்பு தொழிலாளர் வேலைநிறுத்தம்

சக ஊழியர் ஒருவர் இனந்தெரியாதோரால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து வவுனியா நகர சபை நகர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இரு தினங்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நகர சுத்திகரிப்பு தொழிலாளியான சண்முகம் கிருஷ்ணமூர்த்தி என்பவர் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் கடந்த புதன் அன்று ஓட்டோவில் வந்த ஒரு சிலரால் கைது செய்யப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார். இவரது கைதை ஆட்சேபித்தே நகரசுத்திகரிப்பு பணியாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளரை முன்னாள் நகரசபை உறுப்பினர் அன்ரனி யெனடிற் மற்றும் விமலதர்மதோர் ஆகியோர் சந்தித்து கைதான ஊழியரை இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ஜ)

### மாதாந்த விஞ்ஞான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூயவிஞ்ஞான பிரிவினால் ஒழுங்கு படுத்தப்பட்ட ஜூலை மாதக் கருத்தரங்கு எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா 'குடித்தொகை உயிரியலில் சில மாதிரிகள்' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார்.

### மீண்டும் ஈடுபாடு

குருநகர்,ஜூலை24

குருநகர் பகுதியில் தங்கியிருந்து குடாக்கடலுக்கு மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் குருநகர் மீனவர்களின் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் குருநகர் மத்திய கிழக்கு வீதியில் அமைந்துள்ள குருநகர் சிறகுவலை அபிவிருத்திச் சங்கம் மீண்டும் தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. (இ-51)

### ஷெல்லினால் காயம்

வவுனியா,ஜூலை24

தென்மராட்சிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஏ.ரி.ரி.ஆறுமுகம் (அம்மன் கோவிலடி, மட்டுவில் வடக்கு) என்பவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவித்தன. (இ-4)

### தீவக ஆசிரியர் பதவி உயர்வு

காரைநகர்,ஜூலை24

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை பதவி உயர்த்தும் பணி வலயமட்டத்தில் நிறைவுபெற்றுள்ளது.

இவர்களுக்குரிய நிரந்தர பதவி உயர்வுக் கடிதங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவில் இருந்து விரைவில் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-73)

### வேள்வி

சுழிபுமலை,ஜூலை24

ஆனைக்கோட்டை காத்தவிநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வேள்வி இடம்பெற்றது. இந்த வேள்விக்காக 70க்கு மேற்பட்ட ஆட்டுக்கடாக்கள் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. (இ-139)

### பஸ்டிப்போ திறப்புவிழா ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,ஜூலை24

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பஸ்டிப்போ ஒன்றைத் திறக்க கடந்த வெள்ளியன்று ஏற்பாடாகியிருந்த போதும் -

திடீரெனக் கொழும்பில் இருந்து வந்த உத்தரவை அடுத்து டிப்போ திறக்கும் பணி நிறுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான படுவான்கரையில் டிப்போ ஒன்றைத் திறக்கவும்-

மூன்று பஸ்களை அங்கிருந்து சேவையில் ஈடுபடுத்தவும் - முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த டிப்போவைத் திறக்க அன்றையதினம் ஏற்பாடுகள் செய்யப்பட்டு டிப்போவுக்கான பொருள்களும் அங்கு அனுப்பப்பட்டிருந்தன.

அன்று காலை கொழும்பில் இருந்து வந்த திடீர் உத்தரவை அடுத்து திறப்புவிழா நிறுத்தப்பட்டது. (இ-3)

**உதயவாக்கு**

**தீய செயல்களை நல்ல சொற்களினாலேயே மறைத்துவிட்ட ஒருவர், மேகத்திலிருந்து வெளிப்பட்ட வெண்ணிலாவைப்போல் விளங்குவார்.**

*- புத்தர்*

**நாளை**

**ஆடி 10**

**செவ்வாய்க்கிழமை**

*திதி:* நவமி
முன் இரவு 10.19 வரை
*நட்சத்திரம்:* பரணி
முன் இரவு 9.59 வரை
*சுபநேரம்:* 10.32 - 12.02
*ராகுகாலம்:* 3.02 - 4.32
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை- 2000
## வினாத்தாள் இல. 5

ரம் 5 பகுதி I நேரம் 45 நிமி.

★ வறிய குடும்பம் ஒன்றிலே நீர் காணமுடியாதவற்றைத் தெரிவு செய்து அவற்றை தரப்பட்டிருக்கும் புள்ளிக் கோடுகள் மீது எழுதுக.

* உணவுகள் குளிர்சாதன பெட்டிகளில் காணப்பட்டன.
* பிள்ளைகள் அழுது கொண்டிருந்தார்கள்.
* கண்ணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான்.
* வீடு ஒலையால் வேயப்பட்டிருந்தது.
* அவர்களுடைய கார் வீட்டு முற்றத்தில் நின்றது.
* மின்சார அடுப்பில் சமையல் நடைபெற்றுக் கொண்டிருந் தது.

1) ..............................
2) ..............................
3) ..............................
4) ..............................

★ கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடையை அடைப்புக் குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

5) ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவர்
1) தசவதானி 2) அட்டவதானி 3) தீர்க்கதரிசி


6) முத்தம்மா முறம் கொண்டு அறைந்தாள். முறம் என்பது
1) பெட்டி 2) கடகம் 3) சுளகு

7) குமரன் குடக்கனி ஒன்றுடன் வீட்டுக்கு வந்தான். குடக்கனி என்பது
1) வாழைப்பழம் 2) பலாப்பழம் 3) மாம்பழம்

8) துரியோதனன் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு வந்தான். துவி என்பது
1) மூன்று 2) ஐந்து 3) இரண்டு

9) குழாயிலிருந்து நீர் குபீர் குபீர் என பாய்ந்தது. குபீர் குபீர் என்பது.
1) இணைமொழி 2) இரட்டைக்கிளவி 3) சிலேடை

10) இவ்வுருவில் நான்முகியைக் காட்டுவது.




1 2 3 4

★ 11 - 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடன் பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. அதனைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கீறிடுக.

11) 
1 2 3 4

12) 
1 2 3 4

13) 
1 2 3 4

14) 
1 2 3 4


15) 
1 2 3 4

★ கீழே தரப்பட்டுள்ள தகவலுக்கு அமைய 16-20 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) பிழை எனவும் சரியா, பிழையா எனக் கூற முடியாதாயின் (+) எனவும் புள்ளிக் கோட்டின் மீது குறிக்கவும்.


*பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி 2000 மார்ச் 29ஆம் திகதி நடைபெற்றது. பிரதம விருந்தினர் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். தேசியக் கொடியில் வாளேந்திய சிங்கம் பொறிக்கப்பட்டிருந்தது. பாடசாலைக் கொடியை அதிபர் ஏற்றி வைத்தார். விளையாட்டுக்கள் 14.00 மணிக்கு ஆரம்பமானது. 15 வயதுப் பிரிவில் சிறந்த விளையாட்டு வீரனாக கே.கிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டான். சிறந்தவீராங்கனையாக பொ. ஜஸ்மினா தெரிவு செய்யப்பட்டாள்.*

16) விளையாட்டுப் போட்டி பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமானது. ( )
17) பிரதம விருந்தினராகக் கலந்தவர் சு.தியாகராஜா அவர்கள் ஆவார். ( )
18) இது ஒரு கலவன் பாடசாலை ஆகும். ( )
19) சிறந்த விளையாட்டு வீரன் பொ.ஜஸ்மினா. ( )
20) இது இந்தியாவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியாகும். ( )

★ சில குறியீடுகளும் அவற்றின் கருத்துக்களும் அடுத்துத் தரப்பட்டுள்ளன.





கீழுள்ள இரகசியக் குறியீடுகள் குறிக்கும் வாக்கியத்தை எழுதுக.



21) ..............................
22) ..............................
23) ..............................

★ இடைவெளிகளை பொருத்தமான குறியீட்டினால் நிரப்புக.




★ பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலப்பதத்தைத் தருக.

26) பெட்டி ..................... 27) மரம் ..............................
28) தலைமயிர் ..................... 29) பற்கள்..............................
30) இலங்கை .....................

★ சுருக்கமான விடை தருக.

31) சதுரமுகி ஒன்றின் பக்கம் ஒன்றின் நீளம் 3cm ஆகும். அதன் முகங்களின் மொத்தப் பரப்பளவு யாது?
..............................


32) 5 முட்டைகள் 5 நிமிடத்தில் அவியுமாயின் 1 முட்டை அவிய எடுக்கும் நேரம் எவ்வளவு? ..............................


33) ஒரு செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தின் இரு மடங்காகும். அதன் அகலம் 5cm ஆயின் பரப்பளவு யாது? ..............................

34) ரூபா 40 இற்கு 25 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 40 கொய்யாப்பழங்கள் வாங்க எவ்வளவு பணம் தேவை?
..............................

35) $5\frac{1}{5}$, $5\frac{3}{4}$, 5.25எனும் எண்களை இறங்கு வரிசையில் எழுதுக? ..............................

★ அருகில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எண்கள் குறித்த ஒரு எண் கோலத்திற்கேற்ப எழுதப் பட்டுள்ளன. அந்தக்கோலத்திற்கு ஏற்ப மூன்றாவது வட்டத்தினுள் வரவேண்டிய எண்க ள எழுதுக?

36) 


37) 


38) 8 2 5 = 30
9 3 6 = 36 ஆயின்
6 3 9 = ...... ஆகும்

39) 4 2 3 = 3
4 4 6 = 2 ஆயின்
4 8 12 = ...... ஆகும்.

40)
16 22
8 4 11 4 13 4

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்
## பகுதி II

நேரம் 1மணி 15 நிமி.

★ பின்வரும் உரைப்பகுதியை கவனமாக வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

*பரிதியஞ் செல்வன் கடமை முடித்த வீரனைப் போன்று மேற்குத்திசையை நோக்கி மெல்ல நடந்து கொண்டு இருந்தான். பறவை இனங்களும் பார்ப்புகளும் தாம் வதியும் கூடுகளை நோக்கிப் பறந்து கொண்டு இருந்தன. முல்லையும் காந்தளும் மொட்டவிழ்த்து முறுவலித்து மணம் எழுப்பின. தென்றல் காற்றும் அதனோடு சேர்ந்து நறுமணம் பெற்று மெல்லென மிதந்து கொண்டு இருந்தது. மேய்ச்சல் நிலங்களை நோக்கிச் சென்ற ஆவினங்கள் கன்றை நினைத்து மனை திரும்பின. அவற்றின் கழுத்தில் கட்டிய மணிகள் எழுப்பிய இனிய ஓசை கோவலனின் குழல் இசையோடு கலந்து மிதந்து வந்துகொண்டு இருந்தது.*

*நாளெல்லாம் உழைத்து உடலும் உள்ளமும் சோர்வடைந்து இருந்த நான் கடற்கரையை நாடி நடந்தேன். அடிவானத்திலிருந்து பெரிய செந்நிறக் கலசம் ஒன்று மெல்ல இறங்கிக் கடலுள் மூழ்குவதைப் போன்று கொண்டு இருந்தான். சிறிது ஓவியன் ஆக்கிய வண்ண ஓ காட்சி அளித்தது.*

★ பொருத்தமான விடையைத் தெ இடுக.

1) பார்ப்பு என்பதன் ஒத்த க
1) பார்த்தல் 2) குஞ்சு
2) பறவை இனங்கள் என்பது
1) ஆண்பால் 2) பலர்
3) "உள்ளம் சோர்வடைந்த ந நடந்தேன்" இதில் எழுவாய
1) கடற்கரை 2) உள்
4) குழலிசை என்பதைப் பிரித்
1) குழல் + இசை 2) கு
5) தன்மை ஒருமைப் பெயர்
1) நான் 2) வீரன் 3) ப

★ பின்வரும் கூற்றுக்கள் சரியாயின (×) எனவும் அடைப்புகுறிக்கு

6) பரிதியஞ் செல்வன் என்பது
7) இப்பந்தியில் மாலைக் காட
8) சூரிய அஸ்தமனம் சூரிய காட்சி அளித்தல்.
9) தென்றல் காற்றுக்கு இயற்

★ பின்வரும் வினாவுக்கு விடை தரு

10) மாலை நேரத்தில் நடை

I ..............................

II..............................

III ..............................

★ கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டி 11 - 20 வரையான வினாக்கள

| விலைப்பட்டி | |
|---|---|
| அரிசி 1Kg | = |
| தேங்காய் எண்ணெய் 1லீ. | = |
| தீப்பெட்டி 9 | = |
| சன்லைட் 1 | = |
| சீனி 1Kg | = |
| பாண் 1றாத்தல் | = |
| பென்சில்கள் 8 | = |
| அப்பிள்ப்பழம் 1 | = |
| வெள்ளைத்துணி 1m | = |
| சீத்தைத் துணி 1m | = |
| ம.எண்ணெ 1லீ. | = |
| பணிஸ் 1 | = |
| தேயிலை 1Kg | = |

11) 1.75Kg அரிசியின் விலை
12) $1\frac{1}{2}$ டசின் தீப்பெட்டியின்
13) 2.5லீ. தே.எண்ணெயின்
14) வெள்ளைத் துணி 3m 2
15) 10Kg 200g சீனியில் $\frac{1}{4}$ எவ்வளவு?..............................
16) 350 g சீனியின் விலை
17) அப்பிள் பழம் ஒன்று, சீத்த ணெய் 2லீ. பாண் 2 றா தற்கு ரூ200 ஐ கொடுத் மிகுதிப்பணம் எவ்வளவு?
18) 2லீ. ம.எண்ணெ வாங்கு தொகைக்கு வேறு எந்த லாம்? ..............................
19) 800g தேயிலை ஒரே அ அடைக்கப்பட்டது. 5Kg தனை பக்கற்றுகளில் அ
20) இவ்விலைப்பட்டியலின்

★ 21-28 வரை உள்ள வினாக்கள் டுள்ள கூற்றில் உள்ள இடைவெ சொல்லை எழுதுக.

21) எசமான் என்பதன் பெண்
22) கற்களின் கூட்டம் குவிய கூட்டம் ..............................
23) தாய்க்குப் பிள்ளை என்ப ஆகும்.
24) விமானத்தைச் செலுத்து லைச் செலுத்துபவன் ..........
25) சம்மதித்தான் என்பதன் எ ஆகும்.
26) முள் என்பதன் பன்மைச்
27) கேட்டவர்க்கு இல்லை என வாரி வழங்குபவன்.............
28) வழக்கு முடிவில் நீதிபதி ..............................

★ கீழ்வரும் நிகழ்வுகளுக்குப் பொரு இடுக.

29) விடாமுயற்சியால் கடின கருத்தை விளக்கும் ப
I. முயற்சி திருவினையாக்கும்.
II. அடிக்கு மேல் அடி அடியடி

*தப் போன்று பகலவன் கடலினுள் மறைந்து ள். சிறிது நேரத்தில் கைத்திறன் மிக்க வண்ண ஓவியம் போல் மேற்குத் திசை*

**டையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடு**

ன் ஒத்த கருத்துச் சொல்
2) குஞ்சு 3) கூடு
ள் என்பது
) 2) பலர்பால் 3) பலவின்பால்)
வடைந்த நான் கடற்கரையை நாடி
ல் எழுவாய்
2) உள்ளம் 3) நான்
தைப் பிரித்தால்
இசை 2) குழ + இசை 3) குழல் + சை
ப் பெயர்
வீரன் 3) பகலவன்

**ள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் ப்புகுறிக்குள் அடையாளம் இடுக.**

வன் என்பது திங்கள். ( )
ாலைக் காட்சி வர்ணிக்கப்படுகிறது. ( )
ம் சூரியன் கடலில் மூழ்குவதுபோல் ல். ( )
க்கு இயற்கையாகவே நறுமணம் உண்டு. ( )

**து விடை தருக.**

திில் நடைபெறும் 3நிகழ்ச்சிகளைத் தருக.

.......................................................

.......................................................

.......................................................

**விலைப்பட்டியலைப் பயன்படுத்தி இலக்கம் வினாக்களுக்கு விடை தரக.**

| விலைப்பட்டியல் | | |
|---|---|---|
| | = | ரூபா 24.00 |
| ய் 1லீ. | = | ரூபா 60.00 |
| | = | ரூபா 18.00 |
| | = | ரூபா 10.50 |
| | = | ரூபா 30.00 |
| | = | ரூபா 8.50 |
| | = | ரூபா 24.00 |
| | = | ரூபா 17.00 |
| m | = | ரூபா 48.00 |
| | = | ரூபா 52.00 |
| | = | ரூபா 12.00 |
| | = | ரூபா 4.00 |
| | = | ரூபா110.00 |

யின் விலை என்ன?.......................................
பெட்டியின் விலை யாது ?.......................
ர்ணையின் விலை யாது?........................
துணி 3m 25cm விலை யாது?................
சீனியில் $\frac{1}{4}$ பங்கு விற்கப்பட்டால் மிகுதி
.......................................................
ன் விலை என்ன?.......................................
ஒன்று, சீத்தைத் துணி $1\frac{1}{2}$ m, மண்ணெண் பாண் 2 றாத்தல் ஆகியவற்றை வாங்கிய ஐ கொடுத்தால் உமக்குக் கிடைக்கும் எவ்வளவு?.......................................
ண வாங்கும் பெறுமதிக்கு சமனான வேறு எந்தப் பொருளில் ஒன்று வாங்க
.......................................................
ல ஒரே அளவான 8 பைக்கற்றில் டது. 5Kg தேயிலை இவ்வாறான எத் துகளில் அடைக்கலாம்?..............................
ட்டியலின் மொத்த விலை யாது?............

**வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட் ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான**

தன் பெண்பாற் சொல்...................ஆகும்.
டம் குவியல் என்பது போல ஆடுகளின் ................................ எனப்படும்.
ர்ளை என்பது போல பசுவுக்கு................
செலுத்துபவன் விமானி போல கப்ப துபவன் ...................................ஆவான்.
என்பதன் எதிர்காலச்சொல்......................
பன்மைச் சொல்..............................ஆகும்.
இல்லை என்று சொல்லாது பொருள்களை வன்...........................................ஆவான்.
ில் நீதிபதியால் வழங்கப்படுவது............ ...................எனப்படும்.


**க்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடு**

ால் கடின காரியமும் கைகூடும் - இக் ிளக்கும் பழமொழி
னையாக்கும்.
டி அடியடித்தால் அம்மியும் நகரும்.

III. பதறாத காரியம் சிதறாது.

30) வியாபாரி ஒருவர் பலாப்பழ வியாபாரம் செய்தார். அதில் ஒருமுறை ஏற்பட்ட நட்டத்தினால் பெருமளவு சொத் துக்கள் நாசமாகின. இதை விளக்கும் பழமொழி.
I. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
II. பொறுத்தார் பூமி ஆழ்வார்.
III. சூடு கணட பூனை அடுப்பங்கரை நாடாது.

★ **கீழே தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து அதில் இலக்கங் களால் குறிக்கப்படும் உருக்களின் ஆங்கிலப் பதங்களைத் தருக?**




31)............................ 32)............................

33)............................ 34)............................

35)............................ 36)............................

37)............................ 38)............................

39)............................ 40)............................

★ **பின்வரும் பாடலைப் படித்த பின் அதன் கீழ் உள்ள வினாக் களுக்கு விடை தருக?**

*சுற்றிய கந்தை ஒரு முழமாம் - அதில்*
*தோன்றிய பீறலும் ஆயிரமாம்*
*பற்றும் அழுக்கினை போக்க வென்றா - உடை*
*பஞ்சு பஞ்சாய் பறக்கும் அம்மா!*

*ஈரோடு பேனுக்கு இடமாச்சு - கூந்தல்*
*ஈச்சம் செடியது போலாச்சு*
*வாரி முடிப்பதும் இல்லையம்மா - எண்ணெய்*
*மாதம் மூன்றாக அறியாதம்மா!*


41) இப்பாடலில் வருகின்ற ஏழை அணிந்திருக்கின்ற ஆடை எத்தனை முழத்தால் ஆனது?..............................
42) ஏழை அணிந்திருக்கும் ஆடை அழுக்குப் படிந்த ஆடையா? அழுக்குப் படியாத ஆடையா?.................
43) ஏழையின் தலையில் இருக்கும் ஒட்டுண்ணிகள் எவை?
.......................................................
44) ஏழையின் கூந்தல் எதைப்போல் கவிஞனுக்குத் தோன் றியது?..............................................
45) இப்பாடலில் வருகின்ற ஏழை எண்ணெய் வைத்து எத் தனை மாதமாகிறது?..............................

★ **இரகசியக் குறியீட்டைப் அனுசரித்து கீழ்வரம் வினாக்களுக்கு விடைதருக?**

மரம் = 213 கரம் = 413 கும்பி = 536
குருடி = 578


46) மகுடி = ............... 47) கம்பி = ...................
48) மகரம் = ............... 49) பிரடி = ...................
50) குடி = ...............

★ **தரம் 5 மாணவன் ஒருவன் பரிசோதனைக்காக கீழே உள்ள அமைப்பைத் தாயாரித்தான்.**



51) இப்பரிசோதனையை நடத்துவதன் நோக்கம் யாது?
.......................................................
52) மனிதன் உட்சுவாசத்தின் போது பயன்படுத்தும் வளியின் கூறு எது?..............................
53) ஊதிய பலூனை வெயிலில் வைக்கும் போது வெடித் தது. இதற்கான காரணம் யாது?..............................
54) இந்த பால்மா உறையினை அவதானித்து எதன் மூலம் இப்பால்மா பழுதடைந்துள் ளது என்பதை நீர் கூறுவீர்?
.......................................

.......................................




55) இவ்வுணவுப் பண்டம் பொதி செய்த தினம் யாது?
.......................................................

★ **(56 -60) 'உண்மையே பேசி நன்மையே பெறுவாய்' என்னும் தலைப்பில் 5 வாக்கியம் தருக?**


.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................
.......................................................

**தயாரிப்பு:-**
**யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு ஆசிரியர் குழு**


## மேலும் சில புதிர்கள்

**பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மட்டுமல்லாமல் எல்லோரும் தங்கள் பொது விவேகத்தைச் சோதித்துக் கொள்ள கீழே சில புதிர்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுக்கான விடைகளும் நாளைய உதயனில் வெளிவரும்!**
**எங்கே செய்துபாருங்கள் பார்க்கலாம்.**


1) கீழே உள்ள குறிகளில் ஒன்று வித்தியாசமானது. அது எது?




2) கீழே உள்ள முகங்கள் ஒவ்வொன்றும் அதைப்போல மற்றிரு முகங்களைக் கொண்டுள்ளது. ஒன்று மட்டும் மாறியுள்ளது. அது எது?



3) கீழே உள்ள கேடயங்களில் ஒரே மாதிரியான சோடி எது?




4) கீழே உள்ள நால்வரில் யாருடைய முகம் கண்ணாடி யில் தெரிகிறது?



# பண்டிதர், பாலபண்டிதர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த வருடம் சித்தாந்த பிரவேச பண்டிதர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 8 பேர் இரண்டாம் பிரிவிலும், ஒருவர் மூன்றாம் பிரிவிலும் சித்திபெற்றுள்ளனர்.

சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 4 பேர் இரண்டாம் பிரிவிலும், 6 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்திபெற்றுள்ளனர்.

சித்தாந்த பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11பேர் இரண்டாம் பிரிவிலும், 6 பேர் மூன்றாம் பிரிவிலும் சித்திபெற்றுள்ளனர்.

பட்டப் பரீட்சைகளில் சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:-

**சித்தாந்த பிரவேச பண்டிதர்**

* இரண்டாம் பிரிவு

ப.சுமதி (கரந்தன்), சி.நிமலா (மல்லாகம்), ச.தயாநிதி (நீர்வேலி), உ.காஞ்சனா(தெல்லிப்பளை), ச.கலையரசி (உரும்பிராய்), ச.சங்கீதா (சிறுப்பிட்டி), சு.மனோரஞ்சினி (வட்டுக்கோட்டை), நா.கலாதரன் (நாவற்குழி).

* மூன்றாம் பிரிவு

சு.புஸ்பரேகா (நீர்வேலி).

**சித்தாந்த பால பண்டிதர்**

* இரண்டாம் பிரிவு

கு.மாலினி (கந்தர்மடம்), செ.ரேவதி (நீர்வேலி), அ.இராஜரட்ணம் (நல்லூர்), சி.முகுந்தன் (புலோலி).

* மூன்றாம் பிரிவு

வி.அபிராமி (புத்தூர்), கு.கிருபாகினி (பத்தமேனி), கு.லலிதா(மல்லாகம்), சி.சிவாஜினி(ஏழாலை), ஐ.சிவசோதி (தெல்லிப்பளை), செ.இந்திரா (நீர்வேலி).

**சித்தாந்த பண்டிதர்**

* இரண்டாம் பிரிவு

தி.சோமஸ்கந்தராஜக்குருக்கள் (தும்பளை), நி.தசீதரன் (மானிப்பாய்), ஏ.அனுசாந்தன் (குப்பிளான்), பா.சர்வேஸ்வரசர்மா (இணுவில்), தா.பக்தமீரா (யாழ்ப்பாணம்).

வே.கமலேஸ்வரன்(கந்தர்மடம்), செ.சத்தியபவானி(வண்ணார்பண்ணை), ப.ருத்திராதேவி (தெல்லிப்பழை), திருமதி தி.இராஜேஸ்வரன் (நல்லூர்), யோ.யோகரூபி (யாழ்ப்பாணம்), அ.மீனலோசினி (கொழும்புத்துறை).

* மூன்றாம் பிரிவு

ந.கௌசல்யா (புத்தூர்), கோ.ஜெயந்தி (கொக்குவில்), நா.ஜெயகௌரி (நீர்வேலி), க.ஜெயக்குமாரி (கொக்குவில்), இ.இராஜேஸ்வரன் (நல்லூர்), சொ.கோவிந்தர் (சண்டிலிப்பாய்).

சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்ததன் பின்னரே தமக்குரிய பட்டச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும்-

பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்குரிய ஆய்வுக் கட்டுரைத் தலைப்புக்கள் விரைவில் வழங்கப்படும் எனவும் -

சைவபரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

(இ-7)


## முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழியில் ஆறு மாதப் பயிற்சி

க.பொ.த. (சா/த) கடைசித் தகைமை

விவரங்களுக்கு:- **பாலர் ஆசிரியர் சங்கம், கொக்குவில்.**

(76663)



உ

அச்சுவேலி பத்தைமேனி
தீர்த்தாங்குளாய் பிள்ளையார்
திருக்கோயில் மண்டலாபிஷேகப் பூர்த்தி
(45 ஆம் நாள்)

**பஞ்ச குண்டபக்ஷ நவோத்ர சகஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனம்**

காலம்:- நாளை (25-07-2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு

**1008 சங்காபிஷேகம் நடைபெறும்**

தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.
மாலை 8 மணிக்கு 'திருவூஞ்சல்' நடைபெற்று விநாயகப்பெருமான் 'பூந்தண்டிகையில்' திருவீதியுலாவருதலும் நிகழும்.

கிரியா நிகழ்வை இயற்றும் பிரதமகுரு:
**கிரியா விபுதர் சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்**
(சபரிகிரி ஐயப்பன் தேவஸ்தானம், கட்டுவன்)

உபயம் 10 ஆம் திருவிழா அடியார்கள்

ஐங்கரன் அடியார்கள் அனைவரும் வழிபட்டு அருள்பெற்றுச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

**10 ஆம் திருவிழா உபயகாரர்கள்.**

(76626)


## ஆரிய பாஷா அபிவிருத்திச் சங்க வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஆரியபாஷா அபிவிருத்திச் சங்கம் யாழ்நகரில் கே.கே.எஸ். வீதியில் உள்ள பாரதி பாஷா வித்தியாலயத்தில் இயங்கவிருக்கின்றது.

மேற்படி வித்தியாலயக் கட்டடத்தைப் பொறுப்பேற்று சங்கத்தின் வகுப்புக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாகக் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

சங்கத்தினால் நடத்தப்பட்ட பலபண்டிதர் பரீட்சைப் பெறுபேறுகளும் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். (உ)


பாதுகாப்பான சூழலில்....

**I.B.S கல்வி நிறுவனம்**

கோயில் வீதி, யாழ்.

**Paper Class**

O/L & 5

**ஆரம்பம்: 29-07-2000**

(76614)


# குமுதினி மரணம் தொடர்பாக மதுரை நீதிமன்றில் ஒருவர் சரண்

சென்னை,ஜூலை24

தமிழகத்துக்கு அகதியாகச் சென்ற சமயம் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் குமுதினி என்ற குடும்பப் பெண்ணின் மரணம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த முக்கிய நபரான விஜயகுமார் என்பவர் மதுரை நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த கண்ணன் என்பவரை விசாரணைக்காக தம்மிடம் ஒப்படைக்கும்படி பொலிஸால் நீதிமன்றத்திடம் கோரினர்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவரை பொலீஸாரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டது.

அதேநேரம் - இந்தக் கொலை தொடாபாக படகு உரிமையாளரான ஐயாசாமி மற்றும் படகோட்டிகளான, யோசப், அந்தோனி, ஜோர்சன் ஆகியோரைத் தேடி வலை விரித்துள்ளதாகப் பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

(இ-3)

# கைதடி வயோதிபர்களுக்கு வடலியடைப்பில் தங்குமிடவசதி

சண்டிலிப்பாய்,ஜூலை24

கைதடியில் இருந்து இடம்பெயர்ந்த அரசாங்க முதியோர் இல்லம் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வடலியடைப்பு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் தற்காலிகமாகச் செயற்பட்டு வருகின்றது. இங்கு 57 முதியவர்கள் தங்கியுள்ளார்கள். மலசலகூடவசதி, குளிக்கும் வசதி ஆகியன தற்போது பற்றாக்குறையாக இருக்கின்றபோது அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று இக்குறைபாடுகள் எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கைதடிப்பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது 19 முதியவர்கள் மரணமடைந்தது தெரிந்ததே.

(ஐ-135)

# சின்ன மடுமாதா உற்சவம்

ஊர்காவற்றுறை சின்னமடு மாதா உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 5ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இத் திருவிழாவின் இறுதி நிகழ்வாக அடுத்தமாதம் 4ஆம் திகதி இரவு நற்கருணை நாள் ஆராதனையில் மக்கள் கலந்துகொள்ள வசதியாக அப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வண.பிதா ஜெபநேசரட்ணம், யாழ்.ஆயர் ஊடாக பலாலி இராணுவத்தலைமையகத்துடன் தொடர்புகொண்டு ஊரடங்கைத் தளர்த்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ஐ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் கணேசன்**

தவப்பேறு: 19-08-1941 | சிவப்பேறு: 24-07-1999

திதி:- 10-08-2000

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஊரியாட்டி, சுன்னாகம்.

(C/12290)



உ

சிவமயம்





யாழ். சிறாம்பியடி
ஸ்ரான்லி றோட்
அருள்மிகு
ஞானவைரவப் பெருமான் கோவில்

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானத்துக்கு புதிதாக ஓர் அலங்கார ரதத்தை சிறப்பாக உருவாக்கித் தந்த **விஸ்வப்பிரம்மஸ்ரீ சு.இராசரெத்தினம் ஆச்சாரி** அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணிபுரிந்த உதவியாளர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்து நன்றிகளைக் கூறுகின்றோம்.

இந்த ஆலயத்தின் முன்னேற்றம் கருதி சரீர, பொருள் உதவி புரிந்த வணிகப் பெருமக்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

எமது ஆலயப் பணிகளுக்கு ஆலோசனைகள் வழங்கிய **சிவஸ்ரீ பால. சர்வேஸ்வரக் குருக்கள்** B.A. (Hons), அவர்களுக்கும் இந்த ஆலய பரிபாலனத்தை அறநெறியில் நடத்திவரும் திரு.பொன்னுச்சாமி குலரெத்தினம் குடும்பத்தினருக்கும், விழாக்காலங்களில் உபயங்களை அன்போடு செய்யும் உபயகாரப் பெருமக்களுக்கும் எமது இதயபூர்வமான பல நன்றிகளைக் கூறுகின்றோம். 04-06-1998 இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகப் பணிகளுக்கு பொருள் உதவிபுரிந்த V.S.P. வணிக நிறுவனத்துக்கும் ஏனைய வணிக நிறுவனங்களுக்கும் நன்றிகளைக் கூறுகின்றோம்.

நன்றி

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

இங்ஙனம்
ஆலய பிரதம குரு
**சிவஸ்ரீ ப.சிவஞானசுந்தரக்குருக்கள்,**
**உ.கிருபானந்தக்குருக்கள்.**

(76666)



வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளர்

**திரு. க.தர்மேசனின்**

மரணத்தை ஒட்டிய

## நன்றி நவிலல்

அன்னாருக்கு வைத்திய சேவை வழங்கியோர், மரண நிகழ்வுக்கு வேண்டிய ஒத்துழைப்பு வழங்கிய வலிகாமம் கல்வி வலயம், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, மருதனார்மடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் பல்கலைக்கழக துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், மதத்தலைவர்கள் மற்றும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர், மூளாய் இந்து இளைஞர் சங்கத்தினருக்கும், சாரணர் இயக்கத்தினருக்கும், இரங்கலுரை வழங்கியோர், மலர் வளையங்கள் சாத்தியோர், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோர் இறுதி ஊர்வலத்தின்போது பாண்ட் வாத்திய இசை வழங்கியோர், அணிவகுப்பு மரியாதை நிகழ்த்திய சாரணர்கள், பல்வேறு வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தர்மேசன் குடும்பத்தினர்.**

மூளாய்,
சுழிபுரம்.

(76665)

# ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்கு இடையூறாக இருக்க மாட்டோம்

## பாதிக்கப்பட்டோர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்குவதற்காக வெகுவிரைவில் நடத்தப்படவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம் எந்த வகையிலும் இடையூறு ஏற்படுத்த மாட்டாது.

இவ்வாறு ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி ஆசிரியர் நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நீதியான முறையில் நடைபெறும் என்றும் — இதில் பல்கலைக்கழகமாணவர்கள் எவரும் உள்வாங்கப் படமாட்டார்கள் என்றும் — ஈ. பி டி. பி. கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. சே. குகேந்திரன் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அத்துடன் எமது சங்கத்தின் சகல அங்கத்தவர்களையும் தாம் பொறுப்பேற்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை — வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரனும் எமக்கு உறுதிமொழி வழங்கியுள்ளார். பல்கலைக்கழக மாணவர்களும் விண்ணப்பித்துள்ளதாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் ஆசிரியர் பதவியை ஏற்கும் பட்சத்தில் தமது பல்கலைக்கழகக் கல்வியை இழக்க நேரிடும் என்றும் சங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இவர்களின் உறுதி மொழிகளைத் தொடர்ந்தே சங்கம் பொறுமையோடு இருந்து நேர்முகப் பரீட்சைகள் நீதியாக நடைபெறுகின்றதா என்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றது. நேர்முகப்பரீட்சை நீதி தவறி நடைபெறின் இதற்குக் காரணமாக இருந்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்குச் சங்கம் பின்நிற்காது — என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

# வாக்களிக்கத் தகுதிபெற்ற 15 லட்சம் பேர் வெளிநாட்டில்

கொழும்பு, ஜூலை 24

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள ஒரு கோடியே 21 லட்சம் வாக்காளர்களில் சுமார் எட்டில் ஒரு பங்கினர் — அதாவது 15 லட்சம் பேர் — வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

நாட்டைவிட்டுச் சென்று வெளிநாடுகளில் பணியாற்றுவோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியல்களில் உள்ளதாயினும் அவற்றை நீக்குவதற்கு தனக்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லை எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பணியாற்றுவோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியல்களில் இருந்து நீக்கப்படக்கூடாது என முன்னைய அரசு தீர்மானித்திருந்ததாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-2)

# வாழ்வையும்வளத்தையும்கலைக்காக அர்ப்பணித்தோரைக்கௌரவிப்போம்!

## மூத்த கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் உரை

நெடுந்தீவு, ஜூலை 24

தமது வாழ்க்கையையும் பொருளாதார வளத்தையும் கலைகளின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர்கள் எம் மத்தியில் வாழும் மூத்தகலைஞர்கள். எனவே இந்தக் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்ததன் மூலம் இன்றைய இளைய சமுதாயம் தனது நன்றிக்கடனைச் செலுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன்.

நெடுந்தீவு கலாசார சபையின் ஏற்பாட்டில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் மூத்தகலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா அண்மையில் நெடுந்தீவு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில்பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

### பாரம்பரியத்தைப் பாதுகாத்தவர்

எமது பாரம்பரியத்தை அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் தம்மை அர்ப்பணித்த மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்ததன்மூலம் நெடுந்தீவு மண் பெருமை பெறுகிறது.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு, மறைந்து வரும் இந்தக் கலைகளை வளர்க்க வேண்டும் என்ற நோக்குடன் 'கலாசார உத்தியோகத்தர்களை நியமித்து அருகிவரும் கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது. இன்றைய கல்விச் சிரமைப்பிலும் அதற்கான இடத்தை அளித்துள்ளது.

வடக்கு — கிழக்குப் பகுதியில் எந்த ஒரு நிகழ்வுகளையும் இரவு வேளைகளில் நடத்த முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனால் நெடுந்தீவுக் கிராமத்தில் நள்ளிரவு வேளையிலும் இத்தகைய நிகழ்வுகள் இடம்பெறுவது இந்தக் கிராமத்தின் பூரணமான சுதந்திரச் சூழலை எடுத்துக் காட்டுகின்றது.

எமது மூத்த கலைஞர்களுக்கு பாரிய பொறுப்பு உண்டு. இந்தக் கலைகளை அழியாது காக்கும் பொருட்டு இளங்கலைஞர்களை உருவாக்கி எமது இனத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்த வேண்டும் இளங்கலைஞர்கள் இந்தக் கிராமத்தில் உருவாகி வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

எனவே முத்த கலைஞர்களிடம் காணப்படும் திறமைகளை இளம் சமுதாயம் உள்வாங்க வேண்டும். அத்துடன் கலைஞர்கள் இந்த உலகில் வாழும பொழுதே பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்றார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தரும், பாரம்பரியகலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளருமான செ. மெற்றாஸ்மயில் தனது உரையில்:-

### நெடுந்தீவு மண்ணுக்குப் பெருமை

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் இடம்பெற்ற நாட்டுக்கூத்துக்களைப் பேணிக்காத்த பெருமை நெடுந்திவு மண்ணுக்குரியது. இங்கே கலைகள் வளர்ந்தது குறித்து ஏடுகளில் படிக்க முடிந்தது.

கலைஞர்கள் கலைக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள் என்பதை நான் அறிவேன். கடந்த கால வரலாறுகளால் கலைஞர்கள் தமது பிள்ளைகளை இந்தப் பணிக்கு விடவில்லை. ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. இதற்கு மூத்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா வழிவகுக்கும் என நினைக்கின்றேன் என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய நெடுந்தீவு கலாசார சபையின் உபதலைவரும், முன்னாள் அதிபரும், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான நா. சங்கரப்பிள்ளை உரையாற்றுகையில்:

மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படும் இன்றைய நாள் நெடுந்தீவின் வரலாற்றில் முக்கிய நாள். கலைஞர்கள் உயிருடன்வாழும் பொழுதே மதிப்பளித்துக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். காரணம் அவர்கள் எமது பாரம்பரியங்களை நிலை நிறுத்துபவர்கள்.

இன்றைய விழாவில் வயது முதிர்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இனி வருங் காலங்களில் இளைய கலைஞர்களும் கௌரவிக்கப் படுவர். இதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு கலாசார சபையும், நெடுந்திவு வாசிகளும் செய்வர் — என்றார்.

நடிககலாமணி அரியாலையூர் எஸ். செல்வரட்னம், நெடுந்திவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொது முகாமையாளர் இரா. தர்மலிங்கம் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

நெடுந்திவு பிரதேச சபைத் தலைவரும், கலாசாரசபையின் பொருளாளருமான புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் நிகழ்ச்சிகளை வழங்கினார்.

கலைஞர்கள் கௌரவிப்பு விழாவைத் தொடர்ந்து இளம் கலைஞர்கள் ஒன்றிணைந்து அண்ணாவியார் சைமன் ஜேசுதாசனின் தயாரிப்பில் உருவான ''பூதத் தம்பி'' நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.

(இ-7-111)

# குடும்ப சுகாதார அலுவலர்கள் வெற்றிடம் நிரப்பக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜுலை 24

இளவாலை, பெரியவிளான் வடலியடைப்பு. பிரான்பற்று ஆகிய கிராமங்களுக்கான குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாது இருந்து வருகின்றன.

மாதகல் கிராமத்திற்கான குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் செல்வி சுகிர்தா தாமு பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளுக்கும் பதில் கடமையாற்றி வருகின்றார். நீண்ட காலமாக நிரப்பப்படாது வெற்றிடமாக உள்ள குடும்பசுகாதாரசேவை உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு இப்பகுதிகளிலுள்ள பொது நல நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

(ஐ-135)

## வாசகர் திருமுகம்

### விவசாயிகளும் ம. எண்ணெயும்

உரும்பிராய் கமநல சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் கோப்பாய் தெற்கு விவசாய சம்மேளனம் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் பெரும் அதிருப்தியைப் பெற்றுள்ளது ஒரு விவசாயிக்கு மாதாந்தம் 20 லீ.மண்ணெண்ணெய்வழங்குவதாக யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எமது சம்மேளனத்தினரோ எதுவித முகாமைத்துவமும் இல்லாமல் சீரான ஒழுங்கின்றி 10, 12, 16, 18 லீற்றர் என்று சிபார்சு செய்துள்ளனர். அதிலும் விவசாயம் செய்யாதவர்களுக்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. நேரில் இது விடயமாக சம்பந்தப்பட்டவர்களைக் கேட்ட வேளை ஒருவர் மீது மற்றவர் குற்றம் சுமத்தும் பாணியில் பதில் தருகிறார்கள். இதே வேளையில் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு 100 ரூபா சந்தாவாகவும் விநியோக அட்டைக்காக 2 ரூபாவும் செலுத்தினோம். அவ்வாறு செலுத்தியோருக்கு இன்று வரை பற்றுச்சீட்டுத் தரப்படவில்லை. இது தொடர்பாக புகார் செய்த போது எமது விநியோக அட்டையை தாம் திரும்பப் பெற்றுக் கொண்டதோடு பணம் மீளவும் அனுப்பி வைக்கப்பட்டது.

இன்றைய சூழ் நிலையில் விவசாயிகள் படும் இன்னல் இவ்வாறு அமைகின்றது. தட்டிக் கேட்டால் மேற்கண்டவாறு தண்டனையும் தரப்படுகிறது. சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுப்பார்களா? ஏழை விவசாயிகள் தொடர்ந்து பாதிக்கப்பட வேண்டுமா?

கோப்பாய் தெற்கு. விவசாயி

### நாய்களை அழிய விடலாமா?

டிஸ்ரெம்பர் என்று பெயருள்ள ஒரு பயங்கரமான நோய் நாய்களுக்கு வெகு வேகமாகப் பரவி வருகிறது. இதனால் இதுவரை ஏராளமான நாய்கள் இறந்துள்ளன. இன்னும் பல நாய்கள் இந்த நோயினால் பிடிக்கப்பட்டுள்ளன.

DHL என்ற தடுப்பூசியினால் மட்டும் தான் இந்த நோய் வராமல் தடுக்க முடியும்.இந்த மருந்து யாழ்ப்பாணத்தில் கிடையாது. மிருக வைத்தியப் பிரிவினரின் கருத்துப்படி இந்த நோயினால் மனிதருக்கு எதுவித ஆபத்தும் இல்லையென்ற காரணத்தால் அரசாங்கம் இந்த மருந்தைக் கொழும்பிலிருந்து இங்கு அனுப்பி வைக்கமாட்டாது

தனிப்பட்ட முயற்சிகளின் மூலம் தான் இம் மருந்தைத் தருவித்துப் போடவேண்டியுள்ளது. அது சாத்தியப்படாத விடயமாகவே தோன்றுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள நாய்களுக்கு, எத்தனையோ மக்களுடைய பிரிய பிராணிகளுக்கு இந்த நோய் பரவி இங்குள்ள நாய்களில் பெரும்பாலானவை அழிந்தொழிய முன்னர் இதற்கான வழியேதும் பிறக்காதா?

வை. சந்திரபாலன்

கொக்குவில்,

### ஆசிரியர், மாணவருக்கு தனி கப்பல் சேவை நடத்தமுடியாதா?

எதிர்வரும் 28-07-2000 பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக மூடப்படுகின்றன. யாழ். குடாநாட்டில் கடமைபுரியும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர் மற்றும் மாணவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல எதிர்பார்த்திருக்கிறார்கள். இவர்கள் பாதுகாப்பு அனுமதி பெற்றபின் அனுமதிச்சீட்டில் I, J, K போன்ற ஆங்கில எழுத்து அடையாளமிட்டு வழங்கப்பட்டுள்ளது அதாவது 9 ஆவது, 10 ஆவது கப்பல்களில் பயணம் செய்யக் கூடியதாக இருக்கும். இந்தக் கப்பல்கள் செல்ல இரண்டு மூன்று மாதங்கள் கடந்துவிடும் இதற்கிடையில் விடுமுறை முடிந்து மீண்டும் பாடசாலை தொடங்கிவிடும்.

அண்மையில் பல்கலைக்கழக மாணவர்கள் விடுமுறையில் செல்வதற்காக அவர்களுக்குத் தனியான கப்பல் சேவை ஒழுங்கு செய்து அவர்களை அனுப்பி வைப்பதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. இதேபோல ஆசிரியருக்கும் விடுமுறையில் செல்வதற்கு அடுத்த கப்பலை ஒழுங்கு செய்ய கல்வித்திணைக்கள அதிகாரிகளும் சிவில்நிர்வாக அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்களா?

ச. ஜெயம்

யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

உடுவிலை வதிவிடமாகக் கொண்ட திருச்செல்வம் சுகந்தி ஆகிய எனது தே.அ.அ. (696092109 V), விசேட அடையாள அட்டை (0907007022) என்பன சுன்னாகத்திற்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இனுவில் பத்திரிகை விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும். (76661)

செயமணைச்ற ட.இருபாலை தெற்கு எனுமிடத்தைச் சேர்ந்த திரு. பாலசுந்தரம் பவானந்தன் என்பவரது தே.அ.அ. (இல 552871774V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரீலங்காரெலிகொம், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (76664)

## நியமனம்

நெடுந்தீவு, ஜூலை 24

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான உடற்பயிற்சி அலுவலராக க.விஜிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-111)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர் ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசிஎண்: 2459
(76292)

## மூக்குக் கண்ணாடி

மானிப்பாய் லயன்ஸ் கழக ஆதரவுடன் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் பரிசோதனை மேற்கொண்டவர்களில் 18பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினால் இலவசமாக வழங்கப்பட்டன.

# ஆயுள்வேத மருந்து தயாரிக்கும் நிலையக் கட்டடம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாநகர சபை சித்த ஆயுள்வேத மருந்து தயாரிப்பு நிலையக் கட்டடம் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

மாகாண சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியில் இருந்து மேற்படி கட்டட விஸ்தரிப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மருந்து தயாரிப்பு நிலையக் கட்டடம் விஸ்தரிக்கப்படும் பட்சத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சித்த வைத்திய நிலையங்களுக்கும் ஒரே தரத்திலான மருந்து வகைகளை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியும் என்று மாநகர சபை சித்த வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஐ-9)

## கருத்தரங்கு

ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியற் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வணிக மாணவர் மன்றத்தின் ஆதரவில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில் ஆசிரியர் வே. கருணாகரன் கருத்துரை வழங்கவுள்ளார். (இ-9)

## பாராட்டுவிழா

சுழிபுரம், ஜூலை 24

''நம்மத்தியில் இன்று இலை மறைகாயாக விளங்கும் சிலரால் ஆங்கிலத் தரம் காக்கப்பட்டு வருகின்றது. கலாசாலை மட்டத்தில் ஆங்கிலத் தரம் மிகக் குன்றியுள்ளதை நாம் கண்கூடாகவும், அதிகாரிகள் தரும் புள்ளிவிவரங்கள் மூலமாகவும் அறிகின்றோம். இவ்வேளையில் ஆங்கில மொழி பெயர்ப்பாளராகவும் பொதுச் சேவையிலும் தொண்டாற்றி வரும் உதயசூரியனின் சேவையைப் பாராட்டுவதில் நாம் பெருமையடைகின்றோம்.

இவ்வாறு தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பரச் சங்கத்தின் உபதலைவர் உதயசூரியனுக்குச் சமாதான நீதிவான் பதவி கிடைத்ததைக் கௌரவித்து பிரஸ்தாப சங்கத்தினர் நடத்திய பாராட்டு விழாவில் பேசிய கா. நடராசா தெரிவித்தார்.

சங்கத் தலைவர் பொ. சண்முகலிங்கம் தலைமையில் வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் பலர் பங்குகொண்டு பாராட்டுரைகள் வழங்கினர். (இ-7)

# நீங்காத நினைவுகளில் ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி மார்க்கண்டு சிவபாக்கியம்

மலர்வு 22-08-1943
உதிர்வு 06-08-1999

திதி: 25-07-2000 செவ்வாய்க்கிழமை

ஆண்டொன்று மறைந்ததம்மா
ஆனால் உங்கள் அன்பு முகம் மறையவில்லை
அம்மா! ஆறாத்துயரில் எம்மை மூழ்கவிட்டு
ஆண்டவன் அடியில் சேர்ந்தீர்கள் அம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்தநிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவோடு வாழும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

இக்கிராணை,
கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/12292)

# காணவில்லை

MD – 50 – 1902138 CHASSICS NUMBER
ENGINE No – MD – 50 – 1902111
REGISTRATION No – 500 – 3959

நம்பருடைய கொண்டா மோட்டார் சைக்கிள் பருத்தித்துறையில் களவு போய்விட்டது. இதனைக் கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும்.

சி. பிரமநாதன்,
இலங்கைவங்கி சாவகச்சேரி கிளை,
பருத்தித்துறை.

மகாநதி,
16, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/12296)

# யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதங்கள் எடுத்து வழங்குவதற்கும் கழிவு உறுப்புக்களை அழிப்பதற்கும் கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கீழ்வரும் இடங்களில் இருந்து பிரேதங்கள் எடுத்து வந்து வழங்குவதற்கும், கழிவு உறுப்புக்களை யாழ். மருத்துவ பீடத்திலிருந்து அகற்றுவதற்கும் தகுதியான விண்ணப்பதாரிகளிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு இடங்களிலிருந்தும் பிரேதம் எடுத்து வருவதற்கும், கழிவு உறுப்புக்களை அகற்றுவதற்குமான கூலிகள் தனித் தனியே தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

01. யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.

02. தெல்லிப்பழை வைத்தியசாலையிலிருந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு பிரேதம் ஒன்றை எடுத்து வருவதற்கான கூலி.

03. யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து கழிவு உறுப்புக்களை எடுத்துச் சென்று அழிப்பதற்கான பொதி ஒன்றிற்கான கூலி.

குறிப்பு:

கழிவு உறுப்புக்கள் யாழ்ப்பாண மாநகர சபையினாலும் மற்றும் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அமைவாகவும் அவற்றிற்கென குறித்து ஒதுக்கப்பட்ட இடத்தில் சுகாதாரத்திற்கு பங்கம் இன்றி அழிக்கப்படல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்கம் மேல் மூலையில் ''பிரேதங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும்
இறுதித் திகதி: 07-08-2000

பதிவாளர்.

(சி/12287)

# நினைவஞ்சலி

17 ஆம் ஆண்டு 4 ஆம் ஆண்டு







| அமரர் | அமரர் | அமரர் |
|---|---|---|
| எஸ். சரவணமுத்து | சு. கலாபரமேஸ்வரன் | தி. சுப்பிரமணியம் |
| B.[A. (லண்டன்) | (M. A.) | |
| (இளைப்பாறிய ஆசிரியர்) | (முன்னாள் திட்டமிடல் அதிகாரி) | (இளைப்பாறிய விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர், புத்தூர்) |
| பிறப்பு: 19.04.1901 | 02.08.1944 | 23.03.1906 |
| இறப்பு: 24.07.1983 | 24.07.1983 | 06.05.1996 |

தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

''இலட்சுமி பதி'',
526, பலாலி றோட்,
திருநெல்வேலி.

சுன்னாகம் றோட்,
புத்தூர்.

(76662)

## ஊடுருவிய புலிகளைப் பிடிக்க
# கதிர்காமம் ஆலயப் பகுதியில் பெரும் தேடுதல் நடவடிக்கை!

கொழும்பு,ஜூலை24

கதிர்காம உற்சவ காலத்தில் அப்பிரதேசத்தினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் இன்னமும் அங்கு தங்கியிருப்பதாகப் பொது மக்கள் தகவல் கொடுத்ததை அடுத்து அங்கு பெரும் தேடுதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கதிர்காம உற்சவத்துக்கு இம்முறை கிழக்கில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் வந்திருந்தனர் என்றும் -

அவர்களுடன் விடுதலைப் புலிகளும் ஊடுருவியுள்ளனர் என்றும் -

இதனால் தம் மத்தியில் பீதி நிலை தோன்றியுள்ளது என்றும்-

பொதுமக்கள் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை உற்சவம் முடிவடைந்ததை அடுத்து கடந்த வியாழக்கிழமை படையினர் பொலீஸாருடன் இணைந்து அங்கு பெரும் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தத் தேடுதலில் 34 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் -

பின்னர் ஆறு பேரைத்தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# பாதாள உலகக் குழுவினர் தேர்தலுக்கு முன் கைதாவர்!

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தோரைக் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பணியக இயக்குநர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையின் பயனாக இவர்களில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும் அத்துடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் பாதாள உலகக் கும்பல்களில் மொத்தம் சுமார் நாநூறு பேர் இயங்குகின்றனர். அவர்களில் 20 பேர் பயங்கரக் குற்றவாளிகள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் பலர் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் -

அத்தகையோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் -

அவர் கூறினார். (ஐ-3)

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு நூலகவசதி

யாழ்ப்பாணம்,ஜூலை24

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் சைவப்புலவர் பட்டப்பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நூலக வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமக்குரிய பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநூல்கள் பலவற்றைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்தே நூலகவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

'125,அரசடி வீதி,கந்தர்மடம்' என்னும் முகவரியில் உள்ள சைவப்புலவர் சங்கத்தின் அலுவலகத்தில் இந்த நூலகம் இயங்கத் தொடங்கியுள்ளது.

மாணவர்கள் இங்கு நூல்களைப் பார்வையிட்டு தமக்குரிய பாடக் குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## தணிக்கை அதிகாரி விளக்குவார்!

தற்சமயம் அமுலில் உள்ள செய்தித் தணிக்கை தொடர்பாக விளக்குவதற்காக செய்தித் தணிக்கைக்கான தகுதி வாய்ந்த அதிகாரி ஆரியரூபசிங்க இன்று பத்திரிகை ஆசிரியர்களைச் சந்திக்க இருக்கின்றார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் பத்திரிகை ஆசிரியர்களைச் சந்திக்கும் அவர் தணிக்கை தொடர்பான விவரங்களை எடுத்துக் கூற உள்ளார்.

## கொட்டாஞ்சேனையில்
# கைதான நல்லூர் யுவதி குறித்துத் தகவல் இல்லை

கொழும்பு,ஜூலை24

கொட்டாஞ்சேனையில் உள்ள வீட்டில் வைத்துக் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நல்லூரைச் சேர்ந்த யுவதி எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவில்லை என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

நல்லூரைச் சேர்ந்த சண்முகலிங்கம் தவயோகேஸ்வரி (வயது 21) என்ற யுவதி கடந்த 18ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் உள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பிரஸ்தாப யுவதியின் தந்தையார் பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸ் பிரிவுக்குச் சென்று தமது மகள் தொடர்பாக விசாரித்தார். அச்சமயம் ஓர் அறையைக் காட்டிய பொலீஸார் அங்குதான் உமது மகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அவரிடம் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அறையிலிருந்து நூறு அடி தூரத்தில் அவரை நிறுத்தி வைத்தே மகளைக்காட்டியதாகவும் கூறப்படுகிறது.

"அது எனது மகள் அல்ல" என்று அவர் பதில் அளித்துள்ளார். பிரஸ்தாப பெண்ணைக் கைது செய்வதற்கு முதல் நாள் அவரது சகோதரியை விசாரணைக்காகப் பொலீஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.

கல்வியங்காட்டில் உள்ள ஒரு வர்த்தகர் குறித்து அந்தப் பெண்ணிடம் பொலீசார் விசாரித்துள்ளனர்.

அதன் பின்னரே அவரது சகோதரியைப் பொலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ(உயர்தர) பரீட்சைக்கு பிரஸ்தாப பெண் தோற்றவிருக்கிறார் என்றும் -

அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் பொலீஸாரைக் கேட்டுள்ளார். (ஐ-3)

## பெண்கள் வேலை இழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டு வந்த பெண்கள் அப்பணியில் இருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

சுமார் 25பெண்கள் இதனால் வேலை இழந்துள்ளனர்.

உதவியற்ற நோயாளர்களைப் பராமரித்து, அவர்கள் வழங்கும் ஊதியத்தைப் பெற்று இவர்கள் தம் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது அடிக்கடி வார்ட்டுகளில் இடம்பெறும் திருட்டுக்கள் மற்றும் இவர்கள் தொடர்பான வேறுபலகுற்றச்சாட்டுகள போன்ற முறைப்பாடுகள் . நிர்வாகத்திற்குக் கிடைத்ததை அடுத்தே நிர்வாகம் இவர்கள் மீது விசாரணையை மேற்கொண்டு கடந்த 21ஆம் திகதியில் இருந்து இவர்களின் பணியை முடிவுறுத்தி ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்றியுள்ளது. (ஐ)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 23ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/143881/A | 513/143881/B |
| 513/143881/C | 513/143881/D |
| 513/143881/E | 513/144206/A |
| 513/144206/B | 513/146357/A |
| 513/146366/A | 513/146487/A |
| 513/146487/B | 513/147157/A |
| 513/147157/B | 513/147304/A |
| 513/153268/A | 513/153378/A |
| 513/153477/A | 513/153477/B |

### சாவகச்சேரி

511/153137/A

### கரவெட்டி

511/145375/A

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/143355/A | 511/143355/B |
| 511/143445/A | 511/143445/B |
| 511/143459/A | 511/143459/B |
| 511/145250/A | 511/145250/B |
| 511/146244/A | 511/146247/A |
| 511/146248/A | 511/146256/A |
| 511/146257/A | 511/146257/B |
| 511/148978/A | 511/148978/B |
| 511/148978/C | 511/149129/A |
| 511/149130/A | 511/149718/A |
| 511/149718/B | 511/149719/A |
| 511/149720/A | 511/149720/B |
| 511/149720/C | 511/149732/A |
| 511/149732/B | 511/153122/A |
| 511/153129/A | 511/153139/A |
| 511/153139/B | 511/153159/A |
| 511/153159/B | 511/153159/C |
| 511/153159/D | 511/153160/A |
| 511/153160/B | 511/153160/C |
| 511/153166/A | 511/153506/A |
| 511/153507/A | 511/153513/A |
| 511/153513/B | 511/153517/A |
| 511/153517/B | 511/153530/A |
| 511/153530/B | 511/153530/C |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/144763/A | 511/144811/A |
| 511/144813/A | 511/144813/B |
| 511/144816/A | 511/145014/A |
| 511/145015/A | 511/145019/A |
| 511/145117/A | 511/145209/A |
| 511/145211/A | 511/145211/B |
| 511/145230/A | 511/145230/B |
| 511/145405/A | 511/145405/B |
| 511/145513/A | 511/145513/B |
| 511/145513/C | 511/145513/D |
| 511/145542/A | 511/145590/A |
| 511/145597/A | 511/145601/A |
| 511/145619/A | 511/145643/A |
| 511/145723/A | 513/141935/A |
| 513/141935/B | 513/141935/C |
| 513/153274/A | 513/153274/B |
| 513/153430/A | 513/153430/B |
| 513/153444/A | 513/153444/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/147100/A | 513/147100/B |
| 513/150308/A | 513/150308/B |
| 513/150309/A | 513/153227/A |
| 513/153320/A | 513/153320/B |
| 513/153348/A | 513/153348/B |
| 513/153408/A | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/141404/A | 513/141404/B |
| 513/144136/A | 513/144136/B |
| 513/146495/A | 513/153323/A |
| 513/153326/A | |

### உடுவில்

| | |
|---|---|
| 511/140986/A | 511/145212/A |
| 511/145221/A | 511/145228/A |
| 511/145228/B | 513/143880/A |
| 513/146409/A | 513/146409/B |
| 513/146409/C | 513/146409/D |
| 513/153273/A | 513/153279/A |
| 513/153371/A | 513/153371/B |
| 513/153397/A | 513/153399/A |
| 513/153399/B | 513/153399/C |
| 513/153425/A | 513/153425/B |
| 513/153453/A | 513/153453/B |
| 513/153453/C | 513/153479/A |
| 513/153479/B | 513/153479/C |


உ

ஆவரங்கால் பர்பதவர்த்தனி சமேத
நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானம்
பர்பதவர்த்தனி அம்மை
மஹோற்சவ விஞ்ஞாபனம்

ஆடிமாதம் 9ஆம் திகதி (24-07-2000) திங்கட்கிழமை
கொடியேற்றம் பகல் 11மணிக்கு நடைபெறும்.
ஆடிமாதம் 15ஆம் திகதி (30-07-2000) ஞாயிற்றுக்கிழமை
ஆடி அமாவாசை அன்று காலை விசேஷபூசை
பஞ்சமுகார்ச்சனை நடைபெறும்.
ஆடிமாதம் 16ஆம் திகதி (31-07-2000) திங்கட்கிழமை
மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழா
ஆடிமாதம் 17ஆம் திகதி (1-08-2000) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு
இரதோற்சவம்
ஆடிமாதம் 18ஆம் திகதி (2-08-2000) புதன்கிழமை காலை 10 மணிக்கு
பூரகர்மம் ~ தீர்த்தோற்சவம்
மாலை 4 மணிக்கு
திருஊஞ்சலும் ~ கொடி இறக்கமும் இடம்பெறும்.
ஆடிமாதம் 19ஆம் திகதி (3-08-2000) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு
திருக்கல்யாணம் ~ பூங்காவன உற்சவம்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தானம்.

(76675)



இன்று (24-07-2000) முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்
யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர ஆல
தேவி மஹோற்சவத்தை முன்னிட்டு இப்பதிகம் பிரசுரிக்கப்படுகின்றது



"மணியே மணியி னொளியே யொளிரு மணி புனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே"



சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(C/12298)

கனகசபை தர்மகுலசிங்கம்
பழமுதிர்சோலை காரைநகர்.

# வடக்கு - கிழக்கில் உறுதியான ஆட்சியை அமைக்கும் சக்தி புலிகளுக்கே உண்டு!

## அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை24

விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் உருவாக்கப்படும் தீர்வுத் திட்டமே இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதாக அமையும். வடக்கு - கிழக்கு பகுதிகளில் உறுதியான ஆட்சியை அமைக்கும் சக்தி விடுதலைப் புலிகளுக்கே உண்டு.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்று இதனை தெரிவித்தது.

அதில் அஷ்ரப் மேலும் கூறியதாவது:-

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை முழுமையாக திருப்திப் படுத்தக் கூடியவையாக இருக்க வேண்டும் என இன்றைய சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகள் எதிர்பார்க்கக் கூடாது.

ஏனெனில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் போதும் அவர்களுடன் பேசுவதற்கும் எதையாவது விட்டுவைக்கவேண்டும்.

அரசும் ஐ.தே.கட்சியும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்புடன் செயலாற்றாதவரை இந்த நாட்டில் நிரந்தரமான தீர்வைக் காண முடியாது.

பொறுப்புணர்ச்சியுடன் நடத்தப் படும் பேச்சுகளே எப்போதும் வெற்றி தரும்.

இவ்வாறு அமைச்சர் அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# அரசியல் தலைவர்களை கொல்லத் திட்டமாம்

கொழும்பு,ஜுலை24

அரசியல் தலைவர்களை கொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுவருவதாக தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே மக்கள் கூடும் இடங்களில் சமுகம் அளிப்பதை தவிர்க்கும் படியும் -

பயணங்களின் போது அவதானமாக நடக்கும் படியும் -

அரசியல் தலைவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

அரசியல் தலைவர்களை கொலை செய்யும் நோக்குடன் பல தற்கொலைக் குண்டுதாரிகள் ஏற்கனவே கொழும்புக்குள் ஊடுருவி விட்டனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## செஞ்.குழு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் குழு, பாதுகாப்புப் படையினருடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சு நடத்தியது. இதற்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததை அடுத்து நேற்று நீர்வேலி ஊடாக கைதடிக்குச் சென்ற செஞ்சிலுவை அதிகாரிகள் வயோதிபர்களை அழைத்துவந்தனர்.

அம்புலன்ஸ் சகிதம் நான்கு வாகனங்களில் சென்ற செஞ்சிலுவை அதிகாரிகள் அவர்களை அழைத்து வந்தனர்.

85 வயோதிபர்கள் கைதடி வயோதிபர் இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். அவர்களில் 15 பேர் நடக்க முடியாத நிலையில் இருந்தனர். அவர்கள் ஸ்ரெச்சர்கள் மூலம் அம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டுவரப் பட்டு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 40 பேர் பின்னர் வடலியடைப்பில் அமைக்கப்பட்டுள்ள வயோதிபர் இல்லத்துக்கு கூட்டிச்செல்லப்பட்டனர். எஞ்சியோர் நீர்வேலியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அகதி முகாமில் தங்கியிருந்த ஏனையோர் நீர்வேலியில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

அரியாலைப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்த சமயம் கண் பார்வை தெரியாத இருவர் வழிமாறி கைதடிப் பகுதிக்குச் சென்றிருந்தனர். அங்கு காயமடைந்து சிகிச்சை பெற்ற அவர்களும் நேற்று இங்கு அழைத்து வரப்பட்டனர்.

பிரதிமாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம், கோப்பாய் பிரதேச செயலர் எஸ். கேதீஸ்வரன், கைதடி வயோதிபர் இல்லப் பொறுப்பாளர் திருமதி எஸ். துரைரத்தினம் ஆகியோரும் படை அதிகாரிகளும் நேற்று நீர்வேலியில் தங்கியிருந்து வயோதிபர்களை வரவேற்றனர்.

கைதடியில் வயோதிபர்களை, செஞ்சிலுவைக் குழுவினிடம் கையளிப்பதற்கான ஒழுங்குகளை விடுதலைப் புலிகள் செய்திருந்தனர். (ஐ-3-15)

## அரசமைப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைத் தொடர்ந்து உயர்நீதி மன்றத்துக்கு அது சமர்ப்பிக்கப்பட விருக்கின்றது என்றும் -

அதன்பின் பெரும்பாலும் 3ஆம் திகதியளவில் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் அவசர - அவசியமான- விடயம் இது என்பதால் இந்த அரசமைப்பு நகல் குறித்து மூன்று நாள்களில் விசாரித்துத் தனது தீர்ப்பைத் தருமாறு உயர்நீதிமன்றத்தை அமைச்சரவை கோரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நகலின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பிக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் -

தமிழ்க்கட்சிகள் தெரிவித்துள்ள மூன்று அடிப்படை விடயங்களை மாற்றியமைப்பது தொடர்பாக அரசு - ஐ.தே.க. அங்கத்தவர்கள் கொண்ட குழு நாளை கூடி ஆராயவிருக்கின்றது.

இரு தரப்பிலிருந்தும் தலா நால்வர் என்ற அடிப்படையில் எட்டு உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

நாளை கூடி ஆராய்ந்து தயாரிக்கும் அறிக்கையை இந்தக் குழு எதிர்வரும் 29ஆம் திகதி நடக்கும் அரசு - ஐ.தே.க. சந்திப்பில் சமர்ப்பிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

## தேர்தலைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிக்க ஐம்பது லட்சம் ரூபாவை கட்சி ஒதுக்கியுள்ளதாகவும் -

கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்காணிப்பாளர்களின் பணிகளை ஐ.தே.க.தவிசாளர் கரு ஜெயசூரியா ஒருங்கிணைத்து மேற்கொள்வார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்தக்கண்காணிப்பாளர்களின் நலன்களைக் கவனிக்க ஐந்நூறு தொண்டர்களும் நியமிக்கப்பட விருக்கின்றனர்.

இதற்கிடையில் -

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளில் இருந்து நூறு, தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் -

இதற்கு, ஒத்துழைப்பு வழங்க பல நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன என்றும் - கூறப்பட்டது. (ஐ-3)

## சாந்திகம் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம்,ஜுலை24

'சாந்திகம்' உளவளத்துணை நிலையம் மீண்டும் இலக்கம்15, கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள தனது அலுவலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சாந்திகத்தின் தலைவர் டாக்டர் எஸ்.சிவயோகம் தலைமையில் உள நலப்பயிற்சியாளர் பாசறை மீண்டும் நடைபெற்று வருகிறது. (உ)

## ஜனாதிபதி லண்டனில்

கொழும்பு,ஜுலை24

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வைத்திய சிகிச்சைக்காக நேற்று முன்தினம் லண்டன் பயணமானார்.

அவர் அங்கு ஒரு வாரம் தங்கியிருப்பார் என ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (ஐ-3)

## எரிபொருள் நிலையங்களுக்கு மண்எண்ணெய்

அரியாலை,ஜுலை24

யாழ்.நகரப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பௌசர்கள் மூலம் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்கும் மண்எண்ணெய் வழங்கப்பட்டது.

இதேவேளை -

வெளிச்சந்தையில் மண்எண்ணெயின் விலை கடந்த சில தினங்களாக வீழ்ச்சி கண்டு வருகிறது. (ஐ-17)

## ஆயுதக் கிடங்கு அழிப்பு

கொழும்பு,ஜுலை24

கொழும்புத்துறைப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் ஆயுதக் கிடங்கு ஒன்றை படையினர் நேற்று முன்தினம் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டு முற்றாக அழித்துவிட்டனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கொழும்புத்துறையில் உள்ள புலிகளின் நிலைகள் மீது படையினர் தொடர்ச்சியாக மோட்டார் தாக்குதல் நடத்தி வருவதாகவும் அது மேலும் தெரிவித்தது. (ஐ-7-4)

## மூன்று முக்கிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ காணி அதிகாரத்தை பிராந்திய சபைக்கு வழங்குதல்

ஆகிய மூன்று அம்சங்களிலுமே விட்டுக்கொடுப்பதில்லை என்று கூட்டணி முடிவு செய்துள்ளது.

கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நேற்றுக்காலை கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

"தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் மூன்று அம்சங்களையும் அரசமைப்பில் இடம் பெறச் செய்யுமாறு கோரியுள்ளோம். இந்த நிலைபாட்டிலிருந்து நாம் விலகிச்செல்லமாட்டோம். தொடர்ந்து இந்த விடயங்களை வலியுறுத்துவோம்" என்று செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-3)

## விளையாட்டரங்கு

# முதலாவது டெஸ்ரில் இலங்கை வென்றது

கொழும்பு,ஜுலை24

காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றுவந்த முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நான்காம் தினமான நேற்றைய தினமே இலங்கை அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 15 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் 522 ஓட்டங்களைப் பெற்றது. மஹிலஜெயவர்த்தன 167 ஓட்டங்களையும் சனத்ஜெயசூரியா 148 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 238 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

அதனை அடுத்து இலங்கை அணியின் பணிப்பின் பேரில் தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாடக் களம் இறங்கிய தென்னாபிரிக்க அணி 269 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இவர் இத்துடன் ஒரு டெஸ்டில் பத்து விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்திய சாதனையை நான்காவது தடவையாக நிகழ்த்தியுள்ளார். இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாகவும் அவரே தெரிவு செய்யப்பட்டார்.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரின் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது. (உ-4)

## கல்வி நிர்வாக சேவையில்

# வெற்றிடங்களை நிரப்ப விரைவில் விசேட பரீட்சை

கொழும்பு,ஜுலை24

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வி நிர்வாக சேவை ஆளணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக விசேட பரீட்சை ஒன்றை நடத்துவதற்கான அங்கீகாரம் மாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

230 தமிழ் மொழி மூல கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கும், 38 சிங்கள மொழி மூல நிர்வாக சேவை அதிகாரிகளுக்கும் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இவற்றை நிரப்புவதற்கு விசேட பரீட்சை ஒன்று நடத்தப்பட உள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வெளியே உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்றும் -

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வசிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் குறிப்பிட்ட காலம் வடக்கு-கிழக்கில் பணிபுரியச்சம்மதிக்கும் நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் நியமனம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அகதிகளை அனுப்புவதைத் தடுக்க

# கூட்டணிக் குழுவினர் ஜேர்மனி விஜயம்!

கொழும்பு,ஜுலை24

ஜேர்மனியில் தங்கியுள்ள தமிழர்களை நாடுகடத்தும் அந்த நாட்டு அரசின் திட்டத்தை மறுபரிசீலனை செய்வது தொடர்பான பேச்சுகளில் ஈடுபட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு ஒன்று நாளை அங்கு புறப்பட இருக்கிறது.

அங்கு ஒரு வாரம் தங்கியிருந்து இங்குள்ள நிலைமைகளை விளக்கி தமிழ் மக்களை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று இந்தக் குழு கோரவிருக்கிறது.

கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பி. செல்வராசா, கே.துரைராஜசிங்கம், யாழ்.மாநகரசபை உறுப்பினர் எஸ். எஸ்.கணேந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (ஐ-3)

## வீதியில் குடும்பஸ்தர் மரணம்

சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை திடீரென வீழ்ந்து அவ்விடத்திலேயே மரணமானதாகத் தெரிவித்து சுன்னாகம் பொலிஸாரால் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் சடலம் ஒன்று ஒப்படைக்கப்பட்டது.

உடுவில் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தையா கண்ணுத்துரை (வயது62) என்பவரே உயிரிழந்தவராவார். மரணவிசாரணை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-15)


**EXPO LINK - 021-3100**

வெளியிடங்களுக்கான நேரடித் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொம்பியூட்டர் அமைப்பு முறையில் ஓட்டோமெற்றிக் செல்வ் டயலிங் (Automatic Self Dialing) அமைப்பு மூலம் வாடிக்கையாளர்களாகிய நீங்களே இலக்கங்களைச் சுழற்றி உடனுக்குடன் தொலைபேசி அழைப்புக்களைப் பெறலாம்.

*7,கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.*

உரிமையாளர்
எக்ஸ்போ வீடியோ
கொம்பிளக்ஸ்

(C/12300)

**யாழ். வைத்திய நிலையம்**
வேம்படி - யாழ்ப்பாணம்

(NURSING HOME AND PHARMACY)

வெளிநோயாளர் பிரிவு மட்டும்

காலை 9.00 - 12.00
மாலை 2.30 - 4.30

(76600) - *நிர்வாகி*

*மலிவு விற்பனை* *மலிவு விற்பனை*

இன்று (2000.07.24). ஆடித் திங்கள் முதல்

**காவேரி சில்க்ஸ்**

ஸ்தாபனத்தாரின்
மாபெரும்
விசேட ஆடித் தள்ளுபடி விற்பனை
அனைத்து ரக ஜவுளித்தினுசுகளையும் நீங்கள் தெரிவுசெய்திட விரையுங்கள்!

காவேரி சில்க்ஸ்
*யாழ்ப்பாணம்.*

காவேரி சில்க்ஸ்
*குளப்பிட்டி வீதி, (உயரப்புலம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்)*

SALE SALE SALE SALE

(C/12288)

**முக்கிய கலந்துரையாடல்**

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்

காலம்:- இன்று (24-07-2000) நண்பகல் 12

இடம்:- புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(C/12299) *பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்*


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.